விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 08 புதன்கிழமை (24.07.2002) தொலைபேசி 3378 ஒலி 217

திருமணப் பட்டுப் புடவைகளின் களஞ்சியமான ஸ்தாபனம்
ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

★ புலிகள் மீதான தடை நீக்கப்படும்
★ சமாதானப் பேச்சில் அமைச்சர் ஹக்கீமுக்கும் இடம்

# அரசு - புலிகள் பேச்சு
# ஆகஸ்டில் நடைபெறும்!

## பிரதமர் ரணில் அமெரிக்காவில் பேட்டி

(நியூயோர்க்)

**இலங்கையின் இனப்பிரச்சினை நோக்கிய தீர்வில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும். பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்குப் பத்துத் தினங்களுக்கு முன்னதாக விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படும். இவ்வாறு நியூயோர்க் ரைம்ஸக்கு அளித்த பேட்டி ஒன்றில் பிரதமர ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.**

ஒருவார கால உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்காவில் இருந்து வெளிவரும் நியூயோர்க் ரைம்ஸ்க்கு பேட்டியளித்தார்.

அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையில் நீண்ட காலமாக தீர்வு காணப்படாது இருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் இத்தகைய அரசியல் தீர்வில் அரசும் விடுதலைப்புலிகளும்

(02ம் பக்கம் பார்க்க)

## இந்த வருட இறுதிக்குள்
## பாராளுமன்றம் கலைக்கப்படும்?

### அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் இன்னுமொரு பொதுத் தேர்தல் எந்த நேரமும் நடைபெறலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் அமைச்சர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு ஏற்பட்டுள்ள கைப்பை விவகாரம், மற்றும் ஆடம்பரக் கார் இறக்குமதி விவகாரம் தொடர்பான விடயங்களால் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து பாராளுமன்றம் என் நேரமும் கலைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவும் சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவை பாராளுமன்றத்தில் பெறவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிய வருகிறது. (ம)

## இளவாலைப் பகுதியில் இனந்தெரியாத சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஆட்கள் இல்லாத வீட்டு வளவில் இருந்து, இனங்காணப்படாத சடலமொன்று நேற்று இளவாலைப் பொலிசாரால் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இளவாலை விளான் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள வீட்டு வளவில் இருந்தே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வளவைத் துப்புரவு செய்ய அங்கு சென்றபோது சடலத்தை அவதானித்து பொலிசாருக்கு தெரியப்படுத்தியதையடுத்தே

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று வவுனியாவில் உண்ணாவிரதம்

(வவுனியா)

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமியின் கைதைக் கண்டித்தும், உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் களுத்துறை தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

நேற்றுக்காலை ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பிகளான இரா. சம்பந்தன் எஸ்.துரைரத்தினசிங்கம், ஜோசப்பரராஜசிங்கம் ஜீ.ஜீ. கஜேந்திரகுமார், என்.ரவிராஜ், என். கே.சிவாஜிலிங்கம், கே.ஆர்.குகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(02ம் பக்கம் பார்க்க)

### 5வது நாளாக உண்ணாவிரதம்

## களுத்துறைச் சிறைக்கைதிகளின்

அரசியல் வட்டாரங்களில் பரபரப்பா கப் பேசப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் அமைச்சர்களுடன் ஜனாதி

ளால் முறுகல் நிலை ஏற்பட்டுள் ளதை அடுத்து பாராளுமன்றம் என் நேரமும் கலைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கா தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பயன்ப டுத்தி வருவதாகவும் தெரிய வருகி றது. (ம)

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்கும்

## இராஜாங்க உதவி அமைச்சர் கிறிஸ்ரீனா அறிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கையில் நோர்வே அரசாங் கத்தின் அனுசரணையுடன மேற்கொள் ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஆதரவை வழங் கும்.

இவ்வாறு தெற்காசிய விவகார அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரீனா தெரிவித் துள்ளார்.

இலங்கையின் சமாதான நகர் வுகள் குறித்து அமைச்சர் றொக்கா வாஷிங்டன் நகரில் ஊடகவிய லாளருக்கு விளக்கிக் கூறினார். அதன் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்:-

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்று வரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கி ரமசிங்காவை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு.புஷ் சந்திக்க உள் ளமை சமாதான நடவடிக்கைகளிற்கு பலம் சேர்க்கும் முக்கிய நிகழ்வா கும்.

இனப்பிரச்சினைக்கு நிலையான:

(10ம் பக்கம் பார்க்க)

# களுத்துறைச் சிறைக்கைதிகளின் உடல் நிலை மோசமடைகிறது

(களுத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையில் நேற்று 5வது நாளாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வரும் 29 தமிழ் அரசியல் கைதிகளில் பலர் மயங்கியுள்ளதுடன் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரி

(10ம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினியில் இன்று ஒளிபரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

ரூபவாஹினியின் ஐ அலைவரி சையில் இன்று புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு ஒளிபரப்பாகும் படிமங் கள் நிகழ்ச்சியில் யாழ் பல்கலைக் கழக சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கனுடனான நேர்காணல் இடம்பெறும்.

இந் நிகழ்ச்சியை சாந்தி சச்சிதா னந்தன் நெறிப்படுத்தியுள்ளார். (ந)

## செல்லக்கிளி அம்மானின் நினைவு நாள் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில ஒருவரான மாவீ ரர் லெப்டினனட் செல்லக்கிளி அம் மானின் 19வது நினைவு நாள் நேற்று உணர்வுபூர்வமாக நினைவு கூரப் பட்டுள்ளது.

1983ம் ஆண்டு யூலை 23ந் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலி தபால்

(10ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல்

சுபாசிறி

சொந்த தேவைகளுக்கான கடன் திட்டம்

உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம் கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்

இதோ! உங்கள் உற்றதுணையான சுபாசிறி கடன் பற்றிய விபரங்கள்

* ரூ. 25,000/- முதல் ரூ 400,000/- வரை கடன் வசதி பெறலாம்
* மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
* கவர்ச்சிகரமான வட்டி வீதம்
* எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை

இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,

தொலை பேசி :- 021 - 2787, 021 - 3463

தொலை நகல் :- 021 - 3194,

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பொலிஸ் குவாட்டஸ் வவுனியா என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தசாமி சரஸ்வதி என்பவருடைய அடையாள அட்டை, வவுனியா பாஸ்என்பன சைப்பையுடன் பருத்தித்துறையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள். விஜய் சில்க்ஸ் பெரியகடைவீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(5722)

## குடிநீர் விநியோகம் இன்று ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவுக்கான குடிநீர் வழங்கும் சேவை இன்று காலை 10மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. மதனராசா குடிநீர் விநியோகத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

(த- 75)

## கலந்துரையாடல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குள் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின்நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அனைத்து நிர்வாகிகளையும் தவறாது சமுகம் தருமாறு தீவகஅரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

(த- 75)

## ஆடிவேல் திருவோண தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவுகாட்டுக்கந்தோர் கந்தசுவாமி கோவில்ஆடிவேல் திருவோணத் தீர்த்தத் திருவிழா நாளைகாலை 7மணிக்கு நடைபெறவுள்ளது.

முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் எழுந்தருளி கங்காதரணியில் தீர்த்தமாடியபின்ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனை இடம் பெறவுள்ளது. (வ)

# புலிகளை மக்கள் நாடுவதால் பொலிஸில் முறைப்பாடுகள் குறைவு

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகள் செய்வதற்காக செல்வதை தமிழ் மக்கள் நிறுத்திக் கொண்டுள்ளதாக கல்முனைப் பொலிஸ் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு வடக்கு-கிழக்கில் புலிகள் அரசியல் பணிகளை ஆரம்பித்த பின்னர், பொது மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவர்களை நாடிவருவது குறிப்பிடத்தக்கது.

இத்தவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளின் வருகையை அடுத்து இப்பகுதிகளில் குற்றச் செயல்கள் வெகுவாகக் குறைவடைந்துள்ளதும் சுட்டிக்காட்டத்தக்கது. (உ)

## யாழ் மேயர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையினால் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி ஆடு,மாடுகளை உரியவர்கள் 14நாட்களுக்குள் வந்துபெற்றுச்செல்லாவிடில் அவை பகிரங்கஏலத்தில் விற்பனைசெய்யப்படுமென்று யாழ்மேயர் எஸ்.கந்தையன் அறிவித்துள்ளார். (இ)

# ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் கருணநாயக்கா மறுப்பு

(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி சந்திரிக்க குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைக் கொலை செய்வதற்காக கைப்பையில் குண்டுகொண்டு வந்ததாக தான்ஒருபோதும் கூறவில்லை என்று வர்த்தகவாணிபத் துறைஅமைச்சர் ரவி கருணநாயக்கா தனியார்தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்

பாகிஸ்தானில் தற்போது தங்கியுள்ள அமைச்சர் ரவி கருணநாயக்கா அங்கிருந்தவாறு தனியார் தொலைக்காட்சிஒன்றுக்குப் பேட்டி அளித்திருந்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்தபுதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தனதுகைபையில் குண்டுடன் வந்தார்என்று நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை இன்நிலையில் ஜனாதிபதிஎன்மீது சுமத்தும் குற்றச்சாட்டில் எந்தவிதமான உண்மையும் இல்லைஎன்றும் தெரிவித்துள்ளார். (ம)

## பொலிஸ் திணைக்களம் மனித உரிமைகளை பெருமளவில் மீறுகிறது

(கொழும்பு)

மனிதஉரிமைகளை மீறும் நடவடிக்கைகளில் பொலிஸ் திணைக்களமே முக்கிய பங்காற்றி வருவதாக கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சந்திரதாஸ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விசேட சலுகை மற்றும் பாகுபாடு காட்டுதலை ஒழிக்கும் மனிதஉரிமைகள் மற்றும் அடிப்படைஉரிமைகள் ஆய்வு நிலையம் ஏற்பாடுசெய்திருந்த சர்வதேச நியாயத்துக்கான சர்வதேச நீதியரசர்களின் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு பொலிஸ் திணைக்களம் மனிதஉரிமைகள் தொடர்பான அறிவூட்டல் வகுப்புக்களை நடத்த வேண்டுமென்றும் அவர் அங்குதெரிவித்துள்ளார். (உ-8)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மதவடி லேன் பகுதியில் நேற்று ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த நபர் ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த ப. சச்சிதானந்தம் (வயது 42) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவராவார். (த- 42)

## யாழ். நூலகத்திற்கு ரூ15மி. ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்தின் அபிவிருத்திக்கென 15மில்லியன் ரூபா வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியினைப்பயன்படுத்தி பொதுநூலகம் புனரமைக்கப்படுமென்றும், பெரும்பாலும் அடுத்த மாத நடுப்பகுதியளவில் நூலகம் திறக்கப்படுமென்றும் யாழ். மாநகர முதல்வர் எஸ். சுந்தையன் அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். நகர வீதிகளை செப்பனிடுவதற்கு இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## முகாமைத்துவ உதவியாளர் பயிற்சிப் பட்டறை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு தொழில் துறைத் திணைக்களத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை இன்று முதல் 3 தினங்கள் திருகோணமலை தொழிற்றுறைக் கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சியை வடக்கு- கிழக்கு தொழிற்றுறைப் பணிப்பாளர் ம.ஏரேனியஸ் நடத்தவுள்ளார்.

இப் பயிற்சியைப் பெறுவதற்காக யாழ். செயலக தொழிற்றுறை உத்தியோகத்தர்கள் இருவர் அங்கு சென்றுள்ளனர்.

வடக்கு-கிழக்கில்முகாமைத்துவ செயற்பாடுகளைத் துரிதப்படுத்தி தொழிற்றுறையின் வீதாசாரங்களை அதிகரித்து வடக்கு- கிழக்கில் பொருளாதார நிலையைக் கட்டி எழுப்புவதே இப் பயிற்சிப் பட்டறையின் நோக்கமாகும். (உ-6)

## கடற்படை வெளியேறியது

(ஊர்காவற்றுறை)

சுருவில் ஐயனார் கோவிலுக்கு அருகில்இருந்த இலங்கை கடற்படையினரின் முகாமில் இருந்துபடையினர்வெளியேறியுள்ளனர்-

கடந்த இருமாதங்களுக்கு முன்னர் சுருவில்பகுதிக்கான கிராமசேவையாளர் அலுவலகம் மற்றும் சமுர்த்திஉத்தியோகத்தர் அலுவலகம் என்பன இயங்கிவந்த கட்டடத்தில் இருந்த கடற்படையினரே வெளியேறியுள்ளனர்.

எனினும்சுருவில் சந்தியில் கடற்படையினர் நிலைகொண்டுள்ள முகாம்சில தினங்களாக பலப்படுத்தப்பட்டுவருகிறது. (த-75)

## காரைநகரில் திடீர் நடமாடும் சேவை

(காரைநகர்)

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் காரைநகர் தெற்கு கிராமசேவையாளர் பிரிவிற்கென திடீர் நடமாடும்சேவை ஒன்று நேற்று நடாத்தப்பட்டது.

இந் நடமாடும் சேவை பாலாவோடை தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது;

இதில் அடிப்படைச் சேவைகளான பிறப்புச் சான்றிதழ் பிரிவு, தேசிய அடையாள அட்டை பிரிவு, மீள்குடியமர்வு பதிவு பிரிவு, சிறுவர் அபிவிருத்தி தழு பிரிவு, சமூக சேவை பிரிவுபோன்றவற்றைச்சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு தமது சேவையை வழங்கினர்.

இந்நடமாடும் சேவையில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். (உ- 246)

## தமிழ் கூட்டமைப்

உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட எம். பிக்கள் அனைவரும் வை. கோபாலசாமியை விடுவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏகமனதாக விடுத்ததுடன் வை. கோவை நேரில்சென்றுபார்த்துஆறுதல் கூறுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது. (ம)

# அரசு-புலிகள் சமாதானப் பேச்சு அடுத்தமாதம் ஆரம்பாகும்

### வாஷிங்டனில் வைத்து பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐந்துநாள்விஜயமொன்றை மேற்கொண்டுகடந்த 20 ஆம் திகதி வாஷிங்டன் சென்ற பிரதமர் அங்கு''நியூயோர்க் ரைம்ஸ்''சஞ்சிகைக்குஅளித்த சிறப்புப் பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பிரதமர் அங்கு கருத்து தெரிவிக்கையில்;

யுத்தத்திற்கு முடிவுகட்டும் நோக்குடன் அரசியல் தீர்வு காணப்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் மக்களின் நலன்களை பேணும்வகையில் முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப்ஹக்கீம்; பேச்சுவார்த்தைக்கானகுழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

அரசாங்கம் உட்படதமிழீழ விடுதலைப்புலிகளும், ஏனைய அரசியல் கட்சிகளும் சமாதானத்தையே நாடிநிற்கின்றன. இவர்களை விடமக்களே சமாதானத்தை கூடுதலான அளவில் எதிர்பார்த்து இருக்கின்றனர் என்பதை தற்போது நன்கு உணரமுடிகின்றது.

அத்துடன், அமெரிக்கத் தலைவர்களுடன் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு நாட்டின் சமாதானம் தொடர்பாகஇராஜ தந்திர உதவியை தந்துதவுமாறும், சீரழிந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வர்த்தக முதலீட்டு ஒப்பந்தத்தைசெய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார். (உ-8)

### அரசு - புலிகள்

பெரும்பான்மை மக்களும் தீவிர நம்பிக்கை வைத்துள்ளனர்.

சமாதானத்தீர்வின் மீது வைத்துள்ள நம்பிக்கையை எவராலும் சிதறடிக்க முடியாது

முக்கிய சில விடயங்களில் மட்டும் இணக்கம்காண்பதில் தாமதமடைவதனால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான இடைவெளி நீண்டு செல்கிறது

விடுதலைப் புலிகள் சிறிவர்களை இயக்கத்தில் இணைத்துக்கொள்ளுதல் வட-கிழக்கில் வரி அறவிடுதல் போன்ற சம்பவங்களினால் ஒரு இணக்கத்துக்கு வரமுடியாதநிலையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாமதமடைகின்றன,

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்ரவூப் ஹக்கீம் பேச்சுவார்த்தையில்சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையின் போது இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாகவும் பேசப்படவுள்ளது.

அமெரிக்கத் தலைவர்களுடன் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையின் போதுஇராஜதந்திரரீதியான ஆதரவினை இலங்கைக்கு அதிகரிக்குமாறும் வர்த்தக முதலீட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தப்போவதாகவும் பிரதமர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். (வ)

## பாலூட்டத் தவறும் தாய்மார்க்கு மார்பு புற்றுநோய் அபாயம்

(கொழும்பு)

தாய்ப்பாலை அறவேபுகட்டாத மற்றும் குறைந்த அளவில் புகட்டும் தாய்மார்க்கு மார்புப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன

பல்வேறுமட்டத்தில் பெண்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி பிள்ளைகளுக்கு பாலூட்டத்தவறிய மற்றும் குறைந்தளவு பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்கள் மத்தியில் புற்றுநோய் அவதானிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்குப் பாலூட்டுவதன் மூலம் புற்றுநோயிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என முன்னர் கருதப்பட்டுவந்த போதிலும் இந்த விடயம் புள்ளிவிபரங்களால் ஒப்புவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது' (உ)

## அதியுச்சப் பாதுகாப்பு வலயமான
# தீவகத்தில் மக்கள் வசிக்கலாம் என்றால்
# வலி. வடக்கில் மக்களை குடியமர்த்த தடை ஏன்?
### பத்திரிகையாளர் மாநாட்டில் கஜேந்திரகுமார் எம்.பி.



(யாழ்ப்பாணம்)

அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தீவகத்தில் வசிக்க பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனில் வலி வடக்கில் ஏன் பொது மக்கள் மீளக் குடியமரக் கூடாது?

நேற்றுமுன்தினம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஜீ. கஜேந்திரகுமார் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அதியுயர் பாதுகாப்பு வலயமாக வலி வடக்கு பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும் அங்கு தீவகம் போல் மக்கள் வசிக்க சட்டத்தில் இடமுண்டு.

வலி வடக்கு மக்களை மீளக் குடியமர்தல் தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற உயர்மட்டமாநாடு,பலத்த எதிர்பார்ப்புடன் இருந்த அப்பகுதிமக்களுக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப வேண்டும் என்பதற்காகவே புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஆனால் அதற்கு முட்டுக்கட்டையாக படையினர் செயற்படுகின்றனர் பொது இடங்களில் இருந்து வெளியேற மறுத்து மக்களின் இயல்பு வாழ்வுக்கும் குந்தகம் விளைவிக்கின்றனர்.

அத்துடன் பொதுமக்களுக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் சவால் விடுக்கும் வகையில் புதிய முகாம்களை அமைத்து வருகின்றனர்.

இந்நிலை தொடருமானால் அகிம்சைவழிப் போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வேறுவழி கிடையாது என்று குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில், தமிழ் மக்களின் காவலாளி என வெளியில் வேடம் புனைந்துள்ள அரசு உள்ளே அவர்களை பொருளாதார ரீதியில் நலிவடையச் செய்ய முனைப்புக் காட்டி வருகிறது.

தனது பொருளாதாரத்தைச் சரிக்கட்டுவதற்காக புலம் பெயர்ந்த தமிழர்களை விலை பேசி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் புலம் பெயர்ந்த தமிழர்களை நாடு கடத்தவோ அல்லது திருப்பியனுப்பவோ முடிவு செய்துள்ளது.

அரசு சமாதானத்திற்காக எடுத்துவரும்முயற்சிகள்பாராட்டத்தக்கவையாக இருந்தாலும் சில நடவடிக்கைகள் அதிருப்திதருவனவாக அமைகின்றன.

உதாரணமாக இராணுவ முகாம்கள் விஸ்தரிப்பு, படைக்குஆட் திரட்டல், பாதுகாப்புச் செலவினங்கள் குறைக்கப்படாமை என்பன மக்களதுமனதில் ஒருவிதபயத்தை ஏற்படுத்துகிறது. கடந்த வருடம் பாதுகாப்பு செலவினங்களுக்கு65மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ் வருடம் 64மில்லியன்ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களிற்கான கடனை அடைக்கவே மேற்படி தொகை ஒதுக்கப்பட்டதாகவும் புதிதாக ஆயுதம் வாங்கும் நோக்கம் எமக்கில்லை எனவும் அரசு தரப்பு கூறி வருகின்றது.

தற்பொழுது அரசிற்கு வழங்கி வரும் ஆதரவு சமாதான முயற்சிக்கான ஆதரவே ஆகும். ஐக்கிய தேசிய முன்னணி அரசு சர்வதேச வல்லரசுகளின் உதவியுடன் தமிழ் மக்களிற்கு அரைகுறை தீர்வை திணிக்கும் கடந்த காலத்தவறையே மீண்டும் விடுமாக இருந்தால் தமிழ்க் கூட்டமைப்புதனது ஆதரவை விலக்கிக்கொள்ளத்தயங்காது என்றார். (உ-19)

## ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கமலா வாசுகியின் ''வண்ணங்களில் வாழ்வெழுதி...'' எனும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2,3,4,8 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மகாஜனாக்கல்லூரிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(உ)

### தீப்பிடித்ததில்
## இளைஞன் பருகாயம்

(மந்திகை)

எரிந்து கொண்டிருந்த அடுப்பிற்குள் மண்ணெண்ணெய் ஊற்றிய வேளை, நெருப்பு பற்றியதில் பலத்த எரிகாயங்களுடன் இளைஞர் ஒருவன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிகண்டியைச் சேர்ந்த டனிஸ்ரதன் (வயது23)என்ற இளைஞரேஇவ்வாறுநெஞ்சுப் பகுதியில்பலத்தஎரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-23)

# வடமராட்சியில் மலேரியா ஒழிப்பு
# நடவடிக்கை முழுவீச்சில் முன்னெடுப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் மலேரியா நோயினை இனங்கண்டு அதனை ஒழிக்கும் நோக்குடன் பாரிய இரத்தப்பரிசோதனையும் உடனடிச்சிகிச்சையும் நேற்றுமுன்தினம்முதல்ஆரம்பமானது.ஒருவாரகாலம் இது நடத்தப்படவுள்ளது.

மலேரியா நோய்த்தாக்கம் அதிகமாக காணப்படும் இப் பிரதேசத்தில் உள்ள செம்பியன்பற்று,மருதன் கேணி, உடுத்துறை ஆகிய பகுதிகளில் தங்கியிருந்து வைத்தியசேவையினை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதி மலேரியாத் தடுப்புப்பிரிவு அதிகாரி எஸ். வர்ணகுலசிங்கம் தலைமையில் மூன்று பிரதான பகுதிகளிலுமுள்ள வீடுகளுக்குச் செல்லும் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மலேரியாத் தடுப்பு பிரிவினர்மூலம் வீட்டிலுள்ள ஒவ்வொருவருடைய இரத்தமும் பெறப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு உடன்சிகிச்சைஅளிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கில் மலேரியாவின் தாக்கத்தை முற்று முழுதாக கட்டுப்படுத்தும் நோக்குடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பருத்தித்துறை சுகாதார வைத்தியஅதிகாரி என்.ஞானசுதன் தெரிவித்தார்.

ஒரு வாரம் தங்கியிருந்து சிகிச்சை நடத்தும் இக்குழுவினர் இப்பகுதிகளில் அமைந்துள்ள கிணறுகளுக்கு குளோறின் இடல்,நுளம்பு வலை வழங்கப்படாதவர்களுக்கு நுளம்பு வலைகளை வழங்குதல்,மலேரியாத்தடுப்பு முறைகள் தொடர்பாக பொது மக்களுடன் கலந்துரையாடல் நடத்துதல்,சிரமதான பணிகள் மேற்கொள்ளல் போன்ற பல்வேறு நிகழ்சித்திட்டங்களினை நடத்த திட்டமிட்டுள்ளனர். (உ-23)

### வர்த்தக வங்கியின்
## இரு புதிய கிளைகள்
## யாழில் நிறுவ நடவடிக்கை
### நிறை வேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக வங்கியின்இருபுதிய கிளைகள் விரைவில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளன. அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் வர்த்தகவங்கியின்சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.

யாழ். வர்த்தக வங்கியின் கணனி வலைப்பின்னலில்' Com net இணைப்பு நிகழ்வில் வலந்துகொண்டஅவ் வங்கியின் நிறை வேற்றுப்பணிப்பாளர் ஏ.எஸ். குணரத்னமேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ். ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இலங்கையின் எப்பகுதியில் வசிப்பவர்களாயினும் சரி அல்லது வேறு நாடுகளில் வசிப்பவர்களும் தமது கணக்குகளை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில்திறப்பதற்குரியபுதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி சம்பந்தமாகபுதிய கடன் முறைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதாக உள்ளோம் அதற்கு வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மற்றும் விவசாயிகளுக்கு கடன்வசதிகள் செய்வதற்கும் நடவடிக்கைஎடுத்துக்கொண்டு வருகின்றோம். உலகில் எந்த மூலையில் இருப்பவர்களும் தமதுகணக்கைஎங்கும்சேமிப்பு செய்யலாம். அந்த சேமிப்பை அவர்கள் வேறு நாடுகளுக்கு சென்றால் தாம் இருக்கும் நாடுகளில் உடனுக்குடன் வட்டியை அறிய முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

மற்றும் இந்த யாழ். கிளையானது வர்த்தகர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் மிகவும் அனுகூலமாக இருக்கும்.

மேலதிக நடைமுறைக்கணக்கில் பணத்தை இட்டு மேலதிகமான வட்டியைப் பெறலாம்.

சிறுவர்களுக்கு என்றும், வளர்ந்தவர்களுக்கு என்றும், பலவிதமான சேமிப்புக் கணக்கும்நடைமுறைக்கணக்குகளும் உள்ளன.

முற்போக்கு சேமிப்புக் கணக்கு, என்றுபல கணக்குகள் இருக்கின்றன.

இந்தக் கணக்குகளை எல்லாச் சிறுவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் அறிமுகப்படுத்தி அவர்களுக்கு வங்கியின் சேவைகளைப் புரிந்து கொள்ளவசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

சிறந்த பெறுபேறுகளை ஆண்டுஐந்துமற்றும்உயர்தரப் பரீட்சைகளில் பெற்ற மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு புலமைப் பரிசில்வழங்குவதற்கு யாழ். வர்த்தக வங்கி முன்வந்துள்ளது.

மற்றும் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்காகவும் அவர்களின் எதிர்கால வாழ்க்கை சுபீட்சமாகஇருப்பதற்காகவும் சிறுவர்களுக்கென தனியான வசதிகள் செய்யப்பட்டு உள்ளன எனவும் மேலும்தெரிவித்துள்ளார். (க-06)

## அமைச்சர்களின் பொய்கள்
## அம்பலமாகுமென அச்சம்

(கொழும்பு)

ஐ.தே.க. அமைச்சர்கள் தமதுபொய்களும்திரிப்புகளும் அம்பலமாகி விடலாம் என்ற அச்சத்தில் வாகன இறக்குமதி ஊழல் விவகாரத்தை திசை திருப்ப ஆரம்பித்திருக்கிறார்கள் என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய இந்த வாகனங்களை பிரதமர் நேரில் வந்து பரிசோதனை செய்யலாம் என்று ஜனாதிபதி முதலில் கூறியிருந்தார். அது அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டது.

வாகனங்களைப் பரிசோதிப்பதை விட முக்கியமான பணிகள் பிரதமருக்கு உள்ளன என்று அமைச்சரவை தெரிவித்ததை தொடர்ந்து அதிகாரிகளின் குழுவொன்று அதனை பரிசோதனை செய்ய அனுமதிக்கப்பட்டது.

ஆனால் பரிசோதனைகள் நடைபெறவில்லை. அமைச்சரவை தீர்மானத்தின்படி மோட்டார் வாகனபதிவாளர் திணைக்கள பரிசோதகர் அல்லது ஓய்வு பெற்ற பரிசோதகர் ஒருவரும் பி.எம்.டபிள்யு நிறுவனத்திலிருந்தும்,பென்ஸ் நிறுவனத்திலிருந்தும் தலா ஒவ்வொரு தொழில் நுட்ப அதிகாரி, அமைச்சரவை செயலாளர், ஜனாதிபதி செயலாளர் பாலபட்ட பெண்டி ஆகியோர் குழுவில் அடங்குவர்.

(உ)

## இராசி பலன்

24 - 7 - 2002
(ஆடி 08, புதன்)
பூரணை பி.ப. 3.01 வரை
உத்தராடம் மு.இ.8.22வரை
ராகு காலம்-12.02-1.32
நல்ல நேரம்-4.32- 6.02
பூரணைவிரதம் அமிர்தசித்தம்

**மேடம்**
தொழில்சிறப்பு, நல்லசெய்தி நிலை மாற்றம், காரிய சித்தி.

**இடபம்**
முயற்சி கைகூடும், திடீர் பயணம், உடல் நலக்குறைவு, சொத்துக்களால் நன்மை.

**மிதுனம்**
குடும்பத்தில் மனஸ்தாபம், பிரயாண பயம், போசன நன்மை, காரிய தடங்கல்.

**கடகம்**
நண்பர்கள் உதவி, குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை செய் தொழில் முன்னேற்றம்.

**சிங்கம்**
தேக ஆரோக்கியம், அதிக பிரயாசை, தொழில் முன்னேற்றம், முயற்சி பலிதம்.

**கன்னி**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், சிறு வியாதி.

**துலாம்**
தாய்வழி உறவு, ரோகபயம் மரியாதைக் குறைவு, புதிய திருப்பம்.

**விருச்சிகம்**
எடுத்த காரியம் கைகூடும், தன வரவு, குடும்பசுகம், அன்னியர் சந்திப்பு.

**தனுசு**
பொருள் விரயம், பெண்கள் உதவி, காரிய தாமதம், தேவையற்ற மனஸ்தாபம்.

**மகரம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வ சிந்தை, ஆழ்ந்த சிந்தை, உடல் நலம்.

**கும்பம்**
கோபப்படுதல், காரிய தாமதம், சுபசெலவு, பிரயாணம்.

**மீனம்**
கௌரவம், குடும்பத்தில் சந்தோசம், காரிய நன்மை, தனலாபம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிக் கட்டுரைகள்

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
**கே.வி.குணசேகரம்**
**எம்.விக்னேஸ்வரன்**

### நான் சிறுவருக்கான கதை ஒன்றை எழுதி....

நான் சிறுவருக்கான கதை ஒன்றை எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன்.என்ன ஆச்சரியம் அக்கதை ஞாயிறு வார மஞ்சரியில் பிரசுரமாகி இருந்தது. அதைக் கண்டதும் நான் அதிர்ச்சியடைந்தேன். எனது கதை தரமானது என்பதை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது. அக்கதையை அப்பாவும் அம்மாவும் வாசித்து விட்டு என்னைப் பாராட்டினார்கள். நண்பர்களும் அயலவர்களும் வீடு தேடி வந்து என்னைப் பாராட்டினார்கள். மறு நாள் பாடசாலைக்குச் சென்றபோது என்னுடன் படிக்கும் சக மாணவர்கள் என்னைப் பாராட்டினார்கள். வகுப்பாசிரியரும் ஏனைய ஆசிரியர் களும் என்னைப் பாராட்டினர். அன்று பாடசாலையில் நடைபெற்ற காலைக் கூட்டத்தில் அதிபர் என்னைப் பாராட்டினார். ''இப்படி எல்லா மாணவர்களும் தமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் ''என்று கூறினார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அதிபர் காலைக் கூட்டத்தில் எனக்குப் பரிசு ஒன்றைத் தந்தார். மாணவர்கள் எல்லோரும் கைதட்டி ஆரவாரித்தனர். அப்பாவும் பேனா ஒன்று பரிசாகத் தந்தார்.

### இடியுடன் கூடிய பெருமழை பெய்யுமென வானிலை அவதான நிலையம் அறிவித்தது...

இடியுடன் கூடிய பெரு மழை இன்று இரவு பெய்யுமென மாலை ஆறு மணிக்கு வானிலை அவதான நிலையம் வானொலி மூலமும், தொலைக்காட்சி மூலமும் அறிவித்தது. அச் செய்தியைக் கேட்டவுடன் நாங்கள் சில பணிகளைச் செய்தோம். முற்றத்தில் காய்ந்து கொண்டிருந்த விறகுகளை எடுத்துச் சென்று மழை படாத இடத் தில் வைத்தோம். அப்பா வெளியேகட்டியிருந்த மாட்டை அவிழ்த்து உள்ளே கட்டினார். நானும் அக்காவும் யன்னல் கதவுகளைச் சாத்தினோம். அண்ணா மின் உபகரணங்க ளில் தொடுக்கப்பட்ட மின் இணைப்புக்களைக் கழற்றினார். வெளியே உலர்வதற்காக கொடிகளில் போடப்பட்டிருந்த உடுப்புகளை எடுத்து நான் உள்ளே வைத்தேன். எமது வீட்டில் வெள்ளம் தேங்குவது வழக்கம். அதனால் வெள்ளம் வழிந்தோடும் வாய்க்கால் பகுதிகளை அப்பா துப்புரவு செய்தார். இப்படிப் பெரு மழை ஒன்றை எதிர்பார்த்து முன்னேற்பாடாக வீட்டார் எல்லோரும் சேர்ந்து வேலைகள் பலவற்றைச் செய்தோம்.

### நான் தான் சமாதானப் புறா

நான் தான் சமாதானப் புறா. உலகெங்கிலுமுள்ள மக்கள் என்னைச் சமாதானத் தின் சின்னமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடக்கும் போது என்னைப் பெரிய படமாகக் கீறி முன்னே கொண்டு செல்வார்கள். சில கூட்டங்களில் சமாதானம் வேண்டி என்னைப் பறக்க விடுவார்கள். நாட்டுக்குத் தேவை சமாதானம். ஓர் நாட்டில் எல்லா வசதிகளும் இருந்தும் அங்கு வாழும் மக்களிடையே ஒற்றுமையில்லை விட்டால் பெருங்கேடுகள் நிகழும். நான் சமாதானப் புறாவாகையால் உங்களுக்கு என்னாலான சேவையைச் செய்வேன். எப்பொழுதும் ஒற்றுமையாக இருங்கள். உங்கள் நாட்டில் வாழும் ஏனைய இன மக்களை மதியுங்கள். அவர்களின் உரிமைகளில் தலையிடாதீர்கள். பெரியவர்கள் கூறியது போல வாழுங்கள். பிரச்சினைகளை வன்முறைகளால் தீர்க்க முடியாது என்பதை நினைவில் வைத்திருங்கள். நான் கூறியபடி நடந்தால் சமாதானம் ஏற்படும். அதனால் தான் இவற்றை நான் உங்களுக்குக் கூறுகின்றேன்.

### பூனையைக் கண்ட எலியாகிய நான்..

பதுங்கிப் பதுங்கி என்னைப் பிடிப்பதற்காக வந்த பூனையைக் கண்ட எலியாகிய நான் பயத்தால் துள்ளி ஓடினேன். பூனை என்னை துரத்தியது. நான் வேகமாக ஓடினேன். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. என்னைப் பிடித்தால் அது உடனே என்னைக் கொன்று தின்னாது. சித்திரவதை செய்து விளையாடும் என்பதை நினைக்க எனக்குப் பயமாக இருந்தது. ஒரு வாரத்திற்கு முன்புதான் நான் ஏழு குட்டிகளை ஈன்றிருந்தேன். எனது அன்புச் செல்வங்களின் முகங்கள் ஒரு கணம் என் கண்களுக்குள் தெரிந்தன. பிள்ளையாரை மனதார வேண்டிக் கொண்டு விரைவாக ஓடினேன். பூனை ஓடுவது கேட்க மாட்டாது. அதனால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினேன். நம்பிக்கையை நான் இழக்கவில்லை. எதிரே ஒரு கற்குவியல் இருந்தது. அதற்குள் புகுந்து மறைந்து கொண்டேன்.

### நான் ஓர் காட்டூன் படம் வரைந்து ....

நான் ஓர் காட்டூன் படம் வரைந்து ஆசிரியரிடம் காட்டினேன். ''மிகவும் நன்றாக இருக்கின்றது'' என்று சொன்னார். பின் மாணவர்கள் எல்லோரையும் அழைத்து நான் வரைந்த காட்டூன் படத்தை அவர்களுக்குக் காட்டினார். குரங்குகள் சில மரத்தில் விளையாடுவதாக நான் வரைந்த காட்டூன் படம் மிகவும் அழகாக இருப்பதாக ஆசிரியர் கூறியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. பின் என்னையும் அழைத்துக் கொண்டு அதிபரின் அறைக்குச் சென்றார். அதிபர் நான் வரைந்த காட்டூன் படத்தை வெகு நேரமாகப் பார்த்தார். பின் ''நன்றாக வரைந்திருக்கிறீர்'' என்று பாராட்டினார். அதிபரது பாராட்டு எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அதைப்பற்றி வீட்டில் கூறினேன். அப்பா என்னைப் பாராட்டிப் பரிசு ஒன்றும் தந்தார்.

### நீர் எப்படி விடுமுறையைக் கழித்தீர் என்பதைப் பற்றி உமது நண்பருக்குக் கடிதம் எழுதுக.

*வா.டிவாகர்,*
*கிழுவானை வீதி,*
*கோப்பாய் மத்தி,*
*24.07.2002.*

அன்பான அருணன்,

நீண்ட நாளாக நான் உனக்கு கடிதம் எழுதவில்லை. காரணம் நான் விடுமுறையின் போது கண்டிக்குச் சென்றிருந்தேன். அங்கே எனது உறவினர் ஒருவர் இருக்கின்றார். முதலில் தலதாமாளிகைக்குச் சென்றோம். அங்கு மிகவும் அழகான புத்தர் சிலைகள் பல இருந்தன. நாம் சுற்றாடல் பாடத்தில் கற்ற பல விடயங்களை நேரில் பார்க்க முடிந்தது. உயர்ந்த கோபுரங்களும், அதில் வரையப்பட்ட ஓவியங்களும் மனதைக் கொள்ளை கொண்டன. ஏராளமான பௌத்த மக்கள் அங்கு வந்து தீபம் ஏற்றி வணங்கினர். தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அவ் ஆலயத்தைப் பார்க்க மிகவும் அழகாக இருந்தது.

அடுத்த நாள் பேராதனைப் பூங்காவைச் சென்று பார்வையிட்டோம். மிகவும் அழகான, நான் இதுவரை காணாத பல பூக்களைக் கண்டு ரசித்தேன். பல வகையான மீன்கள் தொட்டிக்குள் நீந்தி விளையாடின. அவற்றைப் பார்க்க ஆசையாக இருந்தது. பின் கண்டி நகரைச் சுற்றிப் பார்த்தோம். உயர்ந்த மலைச் சிகரங்களில் மட்டமாக வெட்டப்பட்ட தேயிலைச் செடிகள் மனதைக் கவர்ந்தன. இரவில் மிகவும் குளிராகவும், பகலில் வெப்பமின்றியும் இருந்த காலநிலை என்னை மிகவும் கவர்ந்தது.

பின் கொழும்புக்கு வந்தோம். அங்குள்ள பூங்காக்கள், கோயில்கள், புகையிரத நிலையங்கள், சுப்பமாக்கற் போன்றவற்றைப் பார்த்தோம். மிருகக் காட்சிக்சாலைக்கும், மியூசியத்திற்கும் சென்றோம். விடுமுறை நாட்கள் மிகவும் பயனுள்ள வகையில் கழிந்ததையிட்டு எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

*இப்படிக்கு,*
*அன்புள்ள நண்பன்,*
*வா.டிவாகர்.*

### நான் கனவு கண்டு பயந்து....

நான் கனவு கண்டு பயந்து அலறியபடி எழுந்தேன். எல்லா இடமும் இருட்டாக இருந்தது. எனது உடல் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. உடைகள் வியர்வையால் நனைந்திருந்தன. நான் அலறிய சத்தம் கேட்டு அப்பா எழுந்து லைட்டைப் போட்டார். பின் ''பயங்கரமான கனவு கண்டாயா?'' என்று கேட்டார். அப்பா எழுந்து லைட்டைப் போட்ட பின்பும் எனக்குப் பயமாக இருந்தது. 'பயப்படாதே..' என்று சொல்லிய அப்பா சாமி அறைக்குச் சென்று திருநீறு கொண்டு வந்து எனது நெற்றியில் பூசினார். அதன் பின் எனக்குப் பயம் சற்றுக் குறைந்தது. எனது உடல் வியர்த்திருப்பதைக் கண்ட அப்பா துவாயால் துடைத்தார். பின் மட்டை ஒன்றை எடுத்து வந்து விசுக்கினார். காற்று உடல் மீது பட இதமாக இருந்தது. பின் நான் அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு படுத்தேன்.

### பாடசாலைத் தோட்டத்டதைச் சென்று பார்த்த போது..

அன்று நல்ல மழை. மழை விட்டதும் நாங்கள் பாடசாலைத் தோட்டத்தைச் சென்றுபார்த்தபோது நாம் நட்டிருந்த காய்கறிச் செடிகள் எல்லாம் சரிந்திருந்தன. வாய்க்கால் ஊடாகப் பாய்ந்த வெள்ளம் மண்ணை அரித்துச் சென்றதால் தான் செடிகள் சரிந்ததாக ஆசிரியர் கூறினார். அத்துடன் வெளியே பெய்யும் மழை நீர் உள்ளே வராமல் தோட்டத்தைச் சுற்றி வரம்பு கட்டுமாறும் சொன்னார். நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து வரம்பு கட்டினோம். சரிந்திருந்த செடிகளை மண்போட்டு நிமிர்த்தினோம். பூக்களுடனும், காய்களுடனும் நின்ற செடிகளை நிமிர்த்தும் போது காய்களும், பூக்களும் உதிர்ந்தன. இன்னொரு முறை மழை பெய்யும் போது மண்ணரிப்பு நிகழா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டோம்.

### நான் நண்பர்களுடன் சென்று..

நான் நண்பர்களுடன் சென்று கடற்கரையைப் பார்த்தேன். நாங்கள் சென்றநேரம் மாலை நேரமாகும். கடற்கரையில் ஏராளமான மக்கள் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்காக வந்திருந்தனர். தூரத்தே கடலுக்கு சிறிது மேலாகச் சூரியன் பெரியதொரு வட்டத் தட்டுப் போலத் தெரிந்தான். கடலில் ஏராளமான மீன் பிடி வள்ளங்கள் சென்று கொண்டிருந்தன. அவற்றைப் பார்க்க மிகவும் அழகாக இருந்தன. தூரத்தே ஒரு பெரிய கப்பல் நங்கூரமிட்டிருப்பது தெரிந்தது. கடற்கரையோரத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். கடல் அலைகள் காலில் வந்து அடித்து நுரைத்தன. இருட்டாகுமுன்பு நாங்கள் கடற்கரையில் இருந்து புறப்பட்டோம்.

### கணனியின் வருகையால் மனிதன் அடைந்த நன்மைகள் பற்றி எழுதுக

மனிதனது தேவைகளை உணர்ந்து உடனுக்குடன் நிறைவேற்றி வைப்பது கணனியாகும். இன்றைய நவீன உலகில் கணனியால் செய்ய முடியாத செயல்கள் எதுவுமே இல்லை என்று கூறலாம். கல்வித்துறையில், மருத்துவத்துறையில், வானியல்துறையில் பல சாதனைகளைச் செய்துள்ளது. ஆசிரியராகி மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கின்றது. மருத்துவராகி மக்களுக்கு வைத்தியம் செய்கின்றது. வானில் பறக்கும் விமானங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. பரீட்சைப் பெறு பேறுகள் துரிதமாக வெளிவர உதவி செய்கின்றது. படங்கள் வரைந்து கொடுக்கின்றது. வினாத்தாள்களை துரிதகதியில் தயாரித்துக் கொடுக்கின்றது. இப்படிக் கணனியால் மனிதன் அடைந்த பலன்கள் பலவாகும்.

### நான் பூங்காவுக்குச் சென்ற போது...

நான் எனது பெற்றோர்களுடன் நகரில் உள்ள பிரபலம் வாய்ந்த பூங்காவிற்குச் சென்றபோது அங்கு நான் கண்ட சம்பவத்தை இன்னும் என்னால் மறக்க முடியாமல் இருக்கின்றது. கிட்டத்தட்ட எனது வயதை ஒத்த சிறுவன் ஒருவன் அம்மா பிச்சை. ஐயா பிச்சை போடுங்கள் என பூங்காவிற்குச் சென்று கொண்டிருந்த அனைவரையும் தடவித் தடவிக் கெஞ்சி மன்றாடியதை எவருமே பொருட்படுத்தவில்லை. எனக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. எனது தந்தையிடம் இருபது ரூபாய்த் தாளை வாங்கி அவனிடம் கொடுத்தேன். அவ்ன் மிகவும் சந்தோஷமடைந்து புன்சிரிப்பை வெளிக் காட்டினான். எனக்கும் கூட மகிழ்ச்சியாக இருந்தது. பின்பு நாம் பூங்காவினுள் சென்று அங்குள்ள அலங்கார வளைவுகள், பூம் பந்தல்கள், சிறுவர் விளையாட்டிடங்கள் என்பவற்றைப் பார்வையிட்டும் விளையாடியும் மகிழ்ந்தோம்.

### வீதியில் நிகழ்ந்த விபத்தைக் கண்டு...

நான் சனிக்கிழமை கடைக்குச் சென்று கொண்டிருந்த போது. பிரதான வீதியால் வந்த முதியவர் ஒருவர் அவசரமாக வீதியைக் குறுக்காகக் கடந்தார். எதிரே வந்த மோட்டார் ரதமொன்று அவரை மோதியது. வீதியில் திடீரென நிகழ்ந்த விபத்தைக் கண்டு நான் பயந்து போனேன். சில நிமிடங்கள் என்னால் அவ் அதிர்ச்சியில் இருந்து விடுபட முடியவில்லை. வீதியால் சென்ற மக்கள் விபத்துக்குள்ளான அந்த முதியவருக்கு முதலுதவி செய்தனர். பின் மெதுவாகத் தூக்கி வீதியால் வந்த வாகனம் ஒன்றை மறித்து அதில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.வாகனத்தில் ஏற்றும் போது அவர் சுயநினைவை இழந்திருந்தார். பாதசாரிகள் வீதி கடக்கும் முறையை அனுசரித்துக் கடத்தல் வேண்டும். அவர் வீதி கடக்கும் முறைப்படி வீதியைக் கடக்காதமையால் தான் அவ்விபத்து நடந்தது.

### நான் ஒரு முதியவரைச் சந்தித்து....

நான் கோயிலுக்குச் சென்ற போது அங்கு ஒரு முதியவரைச் சந்தித்து உரையாடினேன். நெற்றியில் வீபூதி பூசி, சந்தனப் பொட்டும் வைத்திருந்த அவரைப்பார்க்க அழகாக இருந்தது. அவருக்கு அருகில் சென்று ''தாத்தா உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டேன். ''நான் சம்மந்தன்'' என்று அவர் சென்னார். கோயிலைப் பற்றியும். வழிபடும் முறைகளைப் பற்றியும் எனக்குச் சொன்னார். திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட கதை உமக்குத் தெரியுமா? என்று கேட்டார். நான் ''ஆம்'' என்று சொன்னேன் ''எத்தனையாம் வகுப்புப் படிக்கிறீர்?'' என்று கேட்டார். ''நான் தரம் ஐந்து'' என்று சொன்னேன். ''இம் முறை புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கிறீர் கவனமாகப் படித்துப் பாஸ் பண்ணும்'' என்றார். அத்துடன் பயனுள்ள பல கதைகளைச் சொன்னார். கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொன்னார். அவரைச் சந்தித்து உரையாடியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

### தரம் 05 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாள் 14 பகுதி II இல் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

01. ஜெ.தட்சாயினி, சங்குவேலி அ.த.க. பாடசாலை.
02. த.வஜீதா, மானிப்பாய் விவேகானந்தாக் கல்லூரி.
03. ந.கௌசிகா, தும்பளைசிவப்பிரகாச மகாவித்தியாலயம்.
04. த.லக்சனா, வடஇந்து மகளிர் கல்லூரி.
05. க.கஸ்தூரி, கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
06. ஸ்ரீ.மிதிலன், உடுவில் மகளிர் கல்லூரி.
07. ந.திருமாறன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
08. ஆ.நிரோஜா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
09. சி.நவாஸ்கர், ஞானாசாரியார் கல்லூரி.
10. சி.ஜனகன், பரியோவான் கல்லூரி.
11. சௌ.ஸ்ரீஹர்ஷன், வடலூர் அ.த.க. வித்தியாலயம்.
12. ச.ஏஞ்சலின் நிவேதிகா, உடுவில் மகளிர் கல்லூரி.
13. ஜீ.கொன்சன், கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை.
14. த.பிரணாளன், தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை.
15. சு.அருணியா, மானிப்பாய் விவேகானந்தா.
16. த.கோகுலன், நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை.
17. வி.தனுசன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
18. அ.கார்த்திகன், புனிதஜோன் பொஸ்கோ.
19. க.கண்ணன், இந்து ஆரம்பப் பாடசாலை.
20. அ.அருட்குமரன், கம்பர்மலை அ.த.க பாடசாலை.
21. ப.ஆரணி, தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.
22. க.கஜீபராஜ், வயாவிளான் மத்திய மகாவித்தியாலம்.
23. செ.யோதினி, தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலம்.
24. ப.சோபியா, நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை.
25. சி.சிவராம், சென்ஜோன்ஸ் கல்லூரி.

# இன்று ஒரு தகவல்

## மூளை பலம் அவசியம்

என் நண்பர் ஒருவர் தினமும் ஒரு தடவை திராட்சைப் பழச்சாறு சாப்பிடுவார். 'என்ன சார் இது, திராட்சை என்றால் உங்களுக்கு அவ்வளவு பிரியமா? என்றேன். பிரியமென்று இல்லை சார்! 'இது எனக்கு ஒரு அவசியத் தேவை! உங்களுக்கு இது அவசியமில்லை' என்றார். 'ஒன்றும் புரியவில்லையே' என்றேன். பார்த்தீர்களா! அதற்குத்தான் சொன்னேன். மூளையை அதிகமாகப் பயன்படுத்தி வேலை செய்கிறவர்களுக்குத்தான் திராட்சை மிகவும் அவசியம்' என்றார்.

ஏதோ கொஞ்சம் புரிகிற மாதிரி இருந்தது. நேராக எனக்குத் தெரிந்த ஒரு சித்த வைத்தியரிடம் போனேன். 'என்ன சார் இது விஷயம்?' என்றேன். அவர் விபரமாகச் சொன்னார். 'திராட்சை மூளைக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும், களைப்பைப் போக்கும்' என்றார். அந்தப் பழத்துக்கு மட்டும் தான் அப்படி ஒரு சக்தியா? என்று கேட்டேன். 'அப்படியில்லை' என்று சொல்லிவிட்டு அவர் விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார். அதைத்தான் நான் இப்போது உங்களுக்குச் சொல்ல ஆரம்பிக்கிறேன்.

மனிதனுக்கு மூளை தெளிவாகவும், வலுவாகவும் இருக்க வேண்டும். அப்படியென்றால் அதற்குத் தகுந்த ஊட்டம் கொடுக்க வேண்டும். சில வகையான பழங்களுக்கு அந்த சக்தி இருக்கின்றது. சில உலர்ந்த பழங்களுக்கும், புதுப் பழங்களுக்கும் மூளை, தசை-திசுக்களில் ஏற்படக்கூடிய நோய்களைப் போக்குகின்ற தன்மை இருக்கிறது.

வாதுமை இருக்கிறதே-இது மூளைக்குச்சக்தியைக் கொடுக்கிறது. தசைகளுக்கு வலுவைக் கொடுக்கிறது. நரம்புகளுக்கும், பித்தப்பைக்கும் நோய் வராமல் காப்பாற்றுகிறது. வால்நட் என்கிற பழமும் மூளை பலவீனத்தைக் குணப்படுத்தும். அத்தோடு அத்திப் பழம், உலர்ந்த திராட்சை ஆகியவற்றையும் சேர்த்து சாப்பிட்டால் மிகவும் நல்லது.

பொதுவாகப் பொஸ்பரஸ் சத்து எந்தெந்தப் பழங்களில் அதிகமாக இருக்கிறதோ, அவை. மூளை, செல், திசு ஆகியவற்றைப் பலப்படுத்த உதவும். மூளைக்கு அதிகமாக வேலை கொடுக்கிறவர்கள் பொஸ்பரஸ் சத்து அதிகமாக இருக்கிற பழங்களைச் சாப்பிடவேண்டும். அப்படிப் பார்த்தால் வாதுமை, அத்தி, திராட்சை, பேரீச்சை, அப்பிள், ஆரஞ்சு ஆகியவற்றில் பொஸ்பரஸ் சத்து அதிகமாக இருக்கிறது. ''பொஸ்பரஸ் புலனுறுப்புகளுக்கும் ஊட்டச் சக்திகொடுக்கும். அப்பிள் மிகவும் நல்லது தினம் ஒன்று சாப்பிடலாம். இருந்தாலும் நமது ஊரில் எல்லாரும் அப்படிச் சாப்பிடக் கூடிய வாய்ப்பும் இல்லை, வசதியும் இல்லை என்ன செய்வது?

திராட்சை, பேரிக்காய், வாழைப்பழம், அத்திப் பழம் ஆகியவை பித்த நீர்க்கோளாறுகளை சரிசெய்து விடுகின்றன. பழங்களிலிருக்கும் சர்க்கரைச் சத்து விரைவில் சக்தியாக மாறிவிடும். அதனால் அது உடம்புக்குப்புத்துணர்ச்சி கொடுக்கும். மூளையில் இரத்த ஓட்டம் குறைவாக இருந்தால் ஊட்டப் பற்றாக்குறை ஏற்படும். அது மூளையைப் பலவீனப் படுத்தும். மூளை பலவீனப் பட்டால் பலவிதமான நோய்களுக்கு அது இடம் கொடுக்கும். கேட்கிறதிறன் பாதிக்கப்படும், பார்வை மங்கும், களைப்பு - மயக்கம்- தலைவலி என்பனவரும், ஆதலால் மூளையைப் பலமாக வைத்திருக்க வேண்டியது நமது கடமை.

உங்களால் முடிந்தஅளவுக்கு பழங்களைச் சாப்பிடுங்கள். தினம் ஒரு அப்பிள் சாப்பிடுங்கள் என்று நான் சொன்னால், உடனே நீங்கள் 'வாங்கிக்கொடுப்பதுயார்நீயா? ஏன் ஐயா இப்படி வயிற்றெறிச்சலைச் கொட்டிக் கொள்கிறாய்? என்று கேட்டாலும் கேட்பீர்கள். அதனால்தான் அப்படிச் சொன்னேன்.

நமது உடம்பில் எந்தப்பாகம் பழுதுபட்டாலும்உடனே மாற்று உறுப்பு வைத்துச் சிகிச்சைபண்ணிவிடுகிறோம், அந்த அளவுக்கு வைத்தியம் வளர்ந்திருக்கிறது. இருந்தாலும் மூளையை மட்டும் முழுதாக அப்படி வைத்துச் சிகிச்சை பண்ண முடியவில்லையே! அப்படி முடிந்தாலும்மூளையைகடன்கொடுக்க தானம் கொடுக்கயார் தயாராக இருக்கிறார்கள்.

அப்படித் தயாராக இருந்தாலும் விரும்பி வாங்குகிற அளவுக்குத் தரமான மூளை இந்தக் காலத்தில் எங்கே கிடைக்கப் போகிறது. எந்த மூளையைப் பார்த்தாலும் அதில் வன்முறை எண்ணம் தானே அதிகமாகத் தெரிகிறது? அதனாலே, இருப்பது மோசமாகி விடக்கூடாது என்கிறஅளவுக்கு மூளையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள், அவ்வளவுதான் சொல்வேன். அப்படிச் செய்யவில்லையானால் நீங்களும் என்னைப் போல் இன்று ஒரு தகவல் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியது தான். ■

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எதிர்க்கட்சித் தலைவர்-அனுரா கருத்து வேறுபாடு மேலும் தீவிரம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் தனக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் இருக்கும் மதிப்பு நிலையை உறுதிகுலைப்பதற்கு ஐ தே.கட்சியின் உதவியுடன் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷமுயற்சித்து வருகிறார் என ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி எம் பி அனுரா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித்தலைவரை குற்றஞ்சாட்டியுள்ளதைத் தொடர்ந்து அவர்களிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு தீவிரமடைந்துள்ளது.

இது ஜனாதிபதிக்கு எதிரான சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், சில வர்த்தகர்களின் உதவியுடன் மேற்கொள்ளும் திட்டமிட்ட முயற்சியாகும் என அனுரா தெரிவித்துள்ளார்;

மேலும் தான்பௌஸிக்கும் ராஜபக்ஷவுக்கும் முன்னரே பொ.ஐ மு.வில் இணைந்து விட்டதாகவும் தேர்தலுக்கு 9 நாட்களுக்கு முன்னரே பொ.ஐ.முஇல் இணைந்து அனைத்து பொ.ஐ.மு.உறுப்பினர்களை விடவும்அதிகபடியாக1இலட்சத்து 60ஆயிரம் விருப்பு வாக்குகளை பெற்றதாகவும், ராஜபக்ஷ அம்பாந்தோட்டையில் இருதடவைகள் தோல்வியுற்றவர்என்றும், சஜித்பிரேமதாசாவிற்கு இரண்டாவதாகவே வென்றிருந்தாரென்றும் தெரிவித்தார்.

அனுரா பௌஸியைப்பற்றி தெரிவித்த இக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையென ராஜபக்ஷதெரிவித்திருந்தமை ஜனாதிபதி பௌஸிக்கெதிராக தெரிவித்த குற்றச்சாட்டுகளை ஆதாரமற்றவையென கூறுவது போன்றதென்றும், அதற்காக ராஜபக்ஷவிடம் விளக்கம் கோரப்படமுடியுமென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீத்தின் மகளின் திருமண வீட்டிற்கு சென்ற பௌஸியையும், அனுரா பண்டாரநாயக்கவையும் அங்கு சென்றிருந்த அலவி மௌலானா சந்திக்க வைத்து சமரச முயற்சிகளை மேற்கொண்டார்.

அப்போது தேசிய அரசாங்கம் அமைக்கும் கொள்கையை தான் எதிர்ப்பதாகவும், கட்சிக்குள் ஏற்பட்டசிக்கல்களை தீர்ப்பதற்கு பௌஸி நீதிமன்றத்திற்குச் சென்ற துதவறென்றும் அனுரா பௌஸியைப் பார்த்துத் தெரிவித்துள்ளார்;

இதனை நேரில் மறுத்த பௌஸிகட்சிக்குள் தமக்கென தனித்தனி திட்டங்களை வகுத்துள்ளவர்களே கட்சியினுள் பிரச்சினைகளை உருவாக்க முனைகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

(உ)

# அரச பணியாளர்களுக்கு கணனிப் பயிற்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

தொலைக்கல்வித் திட்டத்தின் கீழ் வடமாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கானகணனிப்பயிற்சித் திட்டமானது.

இல 48, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்நேற்றுமுன்தினம் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரசாங்க உத்தியோகத்தர்களின் கணனி அறிவை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுஇத்திட்டம்ஆரம்பிக்கப்பட்டுள்ளது.' (உ-6)

# பாப்பரசர் நேற்று கனடா விஜயம்

(கொழும்பு)

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் கனடா, பொத்த மாலா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளுக்கான 15 நாள் விஜயத்தை நேற்று ஆரம்பித்துள்ளார்.

கனடாவில் நடைபெறவுள்ள சர்வதேச கத்தோலிக்க இளைஞர்தின நிகழ்ச்சியில் அவர் உரையாற்றவுள்ளார்.

170 நாடுகளில் இருந்து ஏழு இலட்சத்திற்கும் அதிகமானமக்கள் ரொறன்ரோவில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

72 வயதுநிரம்பிய பாப்பரசர் பதவிக்கு வந்ததன் பின்னர் மேற்கொள்கின்ற 97 ஆவது வெளிநாட்டுப்பயணம் இதுவாகும்.

ரோமாபுரியில் சென்ற தடவை இந்த மாநாடு கூடிய போது 20 இலட்சம் மக்கள் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரொறன்ரோ பயணத்தை முடித்தபின் பாப்பரசர் இம்மாதம் 30 ஆம் திகதி பொத்த மாலாவிலும் அடுத்தநாள் மெக்சிக்கோவிலும் நடைபெறும் கத்தோலிக்க நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளவுள்ளார். (ஷ)

# வான் மோதி சிறுவன் காயம்

(மந்திகை)

வீதியைக் கடக்க முற்பட்ட சிறுவனை எதிரே வந்த ஹயஸ் வான் மோதியதில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிறுவன் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

மூத்த விநாயகர் ஆலயஉற்சவத்துக்குச் சென்று கொண்டிருந்த அதேயிடத்தைச் சேர்ந்த கு.கௌரிபாலன் (வயது 8)என்ற சிறுவனே இவ்வாறு காயமடைந்துள்ளான். (உ-23)

# கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியினால் நடத்தப்பட்டுவரும்2002ஆம் ஆண்டிற்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று பி.ப4.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் புனிதபரியோவான் கல்லூரி அணியும்,

பி.ப 5.00 மணிக்கு திருக்குடும்ப கன்னியர்மட அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரிஅணியும்மோதவுள்ளன.

* * *

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திவரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி.ப4.45 மணிக்குபற்றீசியன் வி.கஎதிர் சென்றல் வி.க,

பி.ப 5.00 மணிக்குசென்றலைற்ஸ் வி.க எதிர் கே.சி.சி.சி.வி.க ஆகியன யாழ்,பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

# தமிழர் வரலாற்று வாரம் கனடாவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

'தமிழர் வரலாற்று வாரம்' கடந்த ஞாயிறு முதல் கனடா தலைநகரில் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழர் வரலாற்றை நினைவு கூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த தமிழர் வரலாற்று வாரத்தில் வடக்கு-கிழக்கு மற்றும் தென்னிந்திய வரலாற்றுப் பின்னணிகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இறுதி நாளான எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்கார்பரோ - அல்போர்ட் காம்ப்வெல் சதுக்கத்தில் 'உலக சமாதானம் 2002' என்ற தலைப்பில் கலாசார கதம்பநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட 1983 ஜூலை வன்செயல்களின் போது உயிர்நீத்த ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களை நினைவுகூரும் நிகழ்வுகளும் இதில் அடங்கும். (உ)

# பொல்லுகளால் தாக்கிய கல்லூரி மாணவர்கள் காசுப்பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

பொரளை டீ. எஸ். சேனநாயக்கவித்தியாலயத்தில் 'சில்' அனுஷ்டித்துக்கொண்டிருந்த மாணவர்களை சூழ்ந்து கொண்டு கற்களாலும், பொல்லுகளாலும், சைக்கிள் சங்கிலிகளாலும் தாக்கிய போது கறுவாக்காட்டுபொலிஸாரால் கடந்த வெள்ளியன்று கைது செய்யப்பட்ட நாலந்தா கல்லூரி மாணவர்கள் 11 பேரும் மாலிகாகந்த மஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது ஒவ்வொருவரும் ரூபா 2 ஆயிரத்து 500 காசுப் பிணையிலும் 50 ஆயிரம்ரூபா உறுதிப்பிணையிலும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலை பஸ் ஒன்றில் நிர்ப்பந்தமாகபணம் திரட்டியதால் ஏற்பட்ட இச்சர்ச்சையில் நாலந்தா கல்லூரி மாணவர்கள் டி. எஸ். சேனநாயக்க கல்லூரியில் திரண்டு தாக்கிய வேளை அக்கல்லூரி ஆசிரியர்களாலும் சில மாணவர்களாலும் சம்பந்தப்பட்டவர்கள் பிடிக்கப்பட்டுகறுவாக்காட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இது பற்றி இருவாரங்களுள் முழு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இரண்டு பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளார், (உ)

# கடற் கண்காணிப்புப் பணி வெள்ளி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமது கடற் கண்காணிப்புப் பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியதையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த தமது கடற் கண்காணிப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடற் கண்காணிப்புக் குழுவினர் தமது பணியை ஆரம்பித்தபோதும் கண்காணிப்பு வேலையில் மாற்றம்கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் கடல் மார்க்கமாக கிழக்கு மாகாணத்துக்கு பிரயாணம் செய்வது தொடர்பாக கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்னும்ஓரிரு தினங்களில் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார் என்றும் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் புவியியல் பாடம்

# அதன் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள்

செல்வி
**சுகந்தினி சுப்பிரமணியம்**
விரிவுரையாளர்
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

அண்மைக் காலமாக உயர்தரக் கல்விப் பாட அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் முதன்மைபெற்று வருகின்றன. உயர்தரக் கல்வியினூடாக மாணவர்களை அறிவாற்றல் படைத்தவர்களாகவும் பல்பரிமாணத்தேர்ச்சிகள் கொண்டவர்களாகவும் ஆக்கும் நோக்குடன் கலைத்திட்டத்தில் பல்வேறு செயற் திட்டங்களும் அனுபவங்களும் இணை பாடவிதானச் செயற்பாடுகளினூடாக புதியகல்விச் செல் நெறிகளாக முன்னெடுக்கப்படுகின்றன.

உயர்தரக் கல்வியில் புவியியல்

உயர்தரக் கல்வியின் நோக்கம் முழு வாழ்க்கைப் பயனே யாகும். இதற்கு முறைசார், முறைசாரா முறையில் வகைகளில் கற்றல் அனுபவங்களை வழங்கும் பொறுப்பு பாடசாலைகளுக்கேயுண்டு. இவ் அனுபவங்களினூடாக நற்பிரஜைகளை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும். இவ் வகையில் உயர்தரக் கல்விப் பாடவரிசையில் புவியியல்பாடமும் அடங்குகின்றது. இப் பாடம் கல்வியின் உயர் நோக்கங்களை அடைய மாணவர்களுக்குவழிகாட்டுகின்றது. இவ் வழிகாட்டல்களை மேலும் பயனுறுதியாக்கும் முகமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் புவியியல் பாடம் கற்றல், கற்பித்தல் தொடர்பான அண்மைய போக்குகளில் கவனம் செலுத்துதல் ஏனைய கல்வி அபிவிருத்தி நோக்கங்களுக்கு வழி காட்டுதல்களாக அமையும்.

புதிய கல்விச்செல்நெறியில் புவியியல் பாடம்

நவீன கல்வித் தேவைகளின் குறிக்கோள்களை அடைய புவியியல்பாடமானதுதேடல். பதித்தல், பிரயோகம் என்ற ரீதியில் மாணவர்களின் நல் நடத்தைகளுக்கும் நற்பிரஜைகளாக வழி காட்டும் பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கியது. அறிவியல் சார் பாடப் பரப்புக்களின் விஞ்ஞானம், தகவல்தொடர்பியல், கணனியியல், சமூகவியலின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டும் பாடமாகவுள்ளது. இயற்கைச் சூழலையும் சமூகப் பண்பாட்டுச்சூழலையும்அறிவியல் ரீதியாக இணைக்கின்ற பயன்பாடுடைய பாடமாகவும் உள்ளது. எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்பாடத்தின் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளின் தேவைஅவசியமாகவுள்ளது.

புவியியல் பாடக்கற்றல்-கற்பித்தல் பிரச்சினைகள்

மிகநீண்டகாலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் புவியியல் பாடம் உயர்தரவகுப்புக்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இப்பாடத்தினூடாக மிகவுயர்ந்த கல்வியின் நோக்கங்களை எமது பிரதேச மாணவர்கள். அடைந்துள்ளார்கள் விரைவாக மாற்றமடைந்து வரும் சமூகச் சூழலுக்கு ஏற்பவும்-
சவால்களை எதிர்கொண்டு பல்வேறு தேர்ச்சிகளைப்பெறவும், இப்பாடம் பல அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குகின்றது. இவ்வாறான முக்கியத்துவமுடைய இப் பாடம் தொடர்பான கற்றல், கற்பித்தல் போக்குகளில் ஆரோக்கியமான சூழல் காணப்படாமைக்கு பல காரணங்கள் இனங்காணப் பட்டுள்ளன. புவியியல் பாடத்தைக் கற்கும் மாணவர் எண்ணிக்கை குறைந்து வருவதாகப் பல கணிப்பீடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இதற்கான காரணங்களாவன.

1, புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் போதுமானதாக இல்லாமை.

2, இப்பாடத்தைத் தெரிவு செய்துகற்பதற்கான சரியான வழிகாட்டல்கள்மாணவருக்கு இன்மை.

3, புவியியல் பாடத்தை கற்பிப்பதற்கு மிக அவசியமான வளங்கள் (இடவிளக்கப் படங்கள், நில அளவை உபகரணங்கள், பூகோளங்கள், கணனிகள் நவீன கற்பித்தல் சாதனங்கள், நூல்கள்) காணப்படாமை.

4. புவியியல் பாடத்திற்கான கருவிகளும் சாதனங்களும் (Equipment and Resources பாடசாலைகளில் காணப்படாமை.

5, செய்முறைப் புவியியல் தொடர்பான களச் செயலமர்வுகள், சுற்றுலாக்கள் கருத்தரங்குகள், போதுமானதாக இல்லாமை.

இக்காரணங்களினால் மாணவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றது.

வீழ்ச்சியடைந்து வரும் புவியியல் பாடப்புள்ளி விபரங்கள் யாழ்.மாவட்டத்தில்

| க. பொ. த. உயர்தரப் பிரிவு | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2000 | 49 | 497 |
| 2001 | 35 | 281 |
| 2002 | 33 | 233 |
| 2003 | 22 | 150 |

இத்தகவல்கள்யாழ். மாவட்டத்தில்பாடசாலை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டன.

இக்கற்கைநெறிப்பாடத்தை யாழ், மாவட்ட உயர்தர வகுப்புக்களில் கற்பது குறைவடைந்து வருவதை மேற்படி தரவுகள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. இவ்வீழ்ச்சிப் போக்கைத் தடுக்க வேண்டிய அவசியமான தேவைகள் இன்று எழுந்துள்ளன. இத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய முன்நடவடிக்கைகளையும் மேலதிக ஆய்வுகளையும் செய்யவேண்டியுள்ளது. ஏனைய உயர்தரப் பாடங்களின் ஆய்வுகளுக்கும் இம் முயற்சி வழிகாட்டுதலாக அமையலாம்.

இப்பாடம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆசிரியர்கள் தொடர்பான, மாணவர்தொடர்பான பொது அபிவிருத்தி என்ற நோக்கில் ஆராயப்படவேண்டியுள்ளது. (தொடரும்)

## தமிழ்ப் பாடசாலையில் தமிழ்தெரியாத ஆங்கில ஆசிரியர் கடமை

(திருகோணமலை)

ஆங்கில பாடம் கற்பிக்க தமிழ்மொழி தெரியாத ஆசிரியர்கள் கந்தளாய் கல்விவலயத்தில்உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மாணவர்களும், பெற்றோரும் வன்மையாகக் கண்டித்து மகஜர் ஒன்றை மாகாணகல்விஅமைச்சுக்கும், கல்வித்திணைக்களத்திற்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

இத்தகைய பாடசாலைகளில் ஆங்கிலம்கற்பிக்க தமிழ்மொழி தெரிந்த ஆசிரியர்களை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-3)

## சிங்கள மக்கள் மீளக் குடியமர்வு பேச்சு நடத்த தயார் கரிகாலன் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண எல்லைப் புற கிராமங்களில் வசித்த சிங்கள குடும்பங்களைமீளக்குடியமர்த்துவதுதொடர்பாகபேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு தயாராக உள்ளதாக மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறை சிறப்புப் பொறுப்பாளர்கரிகாலன்தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எல்லைப் புறக்கிராமங்களான வக்கியெல மற்றும் 36 ஆம் கொலனி போன்ற சிங்களக் கிராமங்களில் இருந்து கடந்த காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது நாட்டில்சமாதானம் முன்னெடுத்துச் செல்லப் பட்டு வரும் இவ்வேளையில் இவர்களைமீள்குடியேற்றுவது தொடர்பாக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்பட மாட்டாது எனவும்,

அத்துடன், இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேசத்தை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வருவதை தாம்வரவேற்பதாகவும்கரிகாலன்தெரிவித்துள்ளார்.

நாட்டில் அனைத்து இனமக்களும் நியாயபூர்வ உரிமைகளுடன்வாழ்வதேதமது போராட்டத்தின் இலக்கு எனவும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## சமாதானம்பற்றிய சிங்கள மக்களின் கருத்தை அறியஏற்பாடு

(கொழும்பு)

ஜனநாயக இடதுசாரி முன்னணியால், சமாதானம் தொடர்பான சிங்கள மக்களின் நிலைப்பாட்டைக் கண்டறியும்வகையில் கருத்துக் கணிப்பொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

யுத்தநிறுத்தத்தைப் பெரிதும் மதிக்கிறேன் அல்லது மதிக்கவில்லை, இனவாதிகளுக்கு எதிராக செயற்பட விரும்புகிறேன் அல்லது விரும்பவில்லை ஆகியன உள்ளிட்ட வினாக்கள் இது தொடர்பில் சிங்கள மக்களிடம் கேட்கப்படவுள்ளன.

இதுகுறித்து துண்டுப்பிரசுரங்களும் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. (உ)

## ஆடம்பரகார் இறக்குமதி விவகாரம் ஜனாதிபதியிடம் இருந்து தகவல்கள் வரத் தாமதம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்புத்தேவைகருதி இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பரக் கார்களின் கொள்வனவுபற்றி விசாரித்துவரும் அமைச்சரவை உபகுழு தனது அறிக்கையை சமர்ப்பிக்குமுன் ஜனாதிபதியிடமிருந்து கோரப்பட்ட தகவல்களுக்காக காத்திருக்கிறதென்று உபகுழு உறுப்பினர்களுள் ஒருவரான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு பின்பற்றப்பட்ட கேள்விநடைமுறைபற்றிய விபரம், இதற்கென வரவுசெலவுதிட்டத்தில் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததா? கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை, வாகனங்களின் உற்பத்தி விபரம், இறக்குமதி செய்த நிறுவனத்தின் நம்பிக்கை சான்றுகள் ஆகிய விபரங்கள்கே. என். சொக்ஷி தலைமையிலான அமைச்சரவைக் குழுவினால் ஜனாதிபதியிடமிருந்து கோரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## வற்வரி விவாதம் இன்று

(கொழும்பு)

பெறுமதி கூடிய வரி (VAT) மீதான விவாதம் இன்று பாராளுமன்றத்தில் இடம் பெறவுள்ளது. (உ-3)

## செய்தித் துளிகள்

### காணி கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்து கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு மேலும் 12 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (உ)

### மூதூரில் உண்ணாவிரதம்

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான மூதூர் கிழக்கு கட்டைபறிச்சானில் நேற்று முன்தினம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதம் நடைபெற்றது.

இவ்வுண்ணாவிரதத்தின் இறுதியில் வை. கோபாலசாமியை விடுதலை செய்யக் கோரும் மனு ஒன்றினை, இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம் மேற்கொண்டார்.

இது விடயம் குறித்து நாட்டின் பலபாகங்களிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆர்ப்பாட்டங்களையும் கண்டனப் பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்தி வருவதும் குறிப்பிடத் தக்கது. (உ-8)

### நீர்கொழும்பில் மருத்துவ அலுவலகம்

(நீர்கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து தென்பகுதியில் வாழ்ந்துவரும் மக்களின் நலன் கருதி நேற்று நீர்கொழும்பில் மருத்துவ அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் மட்டும் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வடக்கு கிழக்கில் இருந்து வந்து குடியேறியுள்ளனர் என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

நேற்று திறந்து வைக்கப்பட்ட இம்மருத்துவ அலுவலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

### இரவு பகல் அன்னதானம்

(சுதுமலை)

கதிர்காமக் கந்தன் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கதிர்காமம் யாத்திரிகர்கள் மடத்தில் தினமும் மதியமும் இரவும் அன்னதானம் வழங்கப்பட்டுவருகின்றது.

இந்து சமய விவகாரங்கள் அமைச்சு இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது.

தூர இடங்களில் இருந்து வரும் பக்தர்களின் நன்மை கருதி இரவு 12.00 மணிவரை மேற்படி மடம் சேவையாற்றி வருகின்றது.

இம்முறை வடக்கு- கிழக்கு பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் கதிர்காம ஆலய உற்சவத்திற்கு செல்வது குறிப்பிடத்தக்கது. (உ-252)

### வாழ்த்து

(டாக்கா)

இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஏ. பி. ஜி அப்துல் கலாமிற்கு பங்களாதேசின் தற்காலிக ஜனாதிபதி முகமட் ஜமீர்ரம் மற்றும் பிரதமர் காலிதார்ஜியா ஆகியோர் இணைந்து வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளனர். (உ-19)

# ஜனாதிபதி மீது அரசியல் குற்றப் பிரேரணை கூட்டத்தில் சூடான கருத்துப் பரிமாற்றம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனக்குள்ள அதிகாரங்களை வைத்துப் பாராளுமன்றத்தை ஒருவருட இறுதியில் கலைத்துவிட முடியும் என்ற நினைவின் எதிரொலியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு அது குறித்து மிகவும் முன்னெச்சரிக்கையோடு செயற்பட்டு வருவதன் மத்தியில் சில நாட்களுக்கு முன் பொ.ஐ.முன்னணியின் பொதுச் செயலாளரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவருமான டி.எம்.ஜயரத்னா ஒரு பேட்டியில், ''ஜனாதிபதி பாராளுமன்றத்தைக்கலைக்க மாட்டார். ஏனெனில் இப்போதைய நிலையில் இவ்வருடம் தேர்தலுக்கு எமது கட்சி தயாராக இல்லை. எமது கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது'' என்று கூறியிருந்தார்.

அதே வேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 'நான் பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன். ஆனால் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைப் பதவி இழக்கச் செய்வேன். மீண்டும் நாம் ஆட்சிக்கு வருவோம்'' என்று தெரிவித்திருந்தார்.

அண்மையில் அநுராதபுரத்தில் ஜயரத்னா குறிப்பிட்டுள்ள கட்சிப் புனரமைப்பு போதி பூசையுடன் ஆரம்பிக்கப்பட்டது இதில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 4ஆம் திகதி ஐ.தே முன்னணி அரசின் அரசியல் விவகாரங்களுக்கான குழுவின் கூட்டத்தில் இவ்வருடம் டிசம்பருக்கிடையில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா மீது அரசியல் குற்றப் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கு வாய்ப்பாக ஜுலை மாத இறுதியில் மனச் சாட்சிப்படி வாக்களிக்கும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்திலும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்திலும் இடம் பெற்ற நிகழ்வுகளை ஜுலை 7ஆம் திகதி 'சண்டே லீடர்' விரிவாக வெளியிட்டிருந்தது. அவற்றில் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

அரசியல் விவகாரங்களுக்கான குழுவின் கூட்டத்தில் அக்குழுவில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான கரு ஜெயசூரியா, ஜீ.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், திலக்மாரப்பன, ஐ.தே.கட்சியின் தவிசாளர் மாலிக்சமரவீரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள அரசியல் குற்றப் பிரேரணையில் அவர் ஆடம்பர வாகனங்களை இறக்குமதி செய்ததில் உள்ள மோசடி, றப்பர் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் நிரூபிக்கக் கூடிய வகையில் வெளிப்படையாகத் தெரியும் பல கோடி ரூபாக்கள் மோசடி அல்லது தவறான முறையில் கையாடப்பட்டமை ஆகிய குற்றங்களும் அத்துடன் மக்களை வன்முறைகளுக்குத் தூண்டிவிடும் வகையில் அவரது பேச்சுக்கள் இருந்தன என்ற குற்றமும் அப்பிரேரணையில் விளக்கப்படுவது பற்றி ஆராயப்பட்டன.

அமைச்சர் திலக்மாரப்பன, ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பாக சரியான நீதி கிடைக்க வேண்டுமானால் முதலில் பிரதம நீதியரசர் சரத்சில்வா மீது அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் என்றார். அதை அமைச்சர் கரு ஜெயசூரிய ஆதரித்துப் பேசினார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படி பிரேரணைகளைத் தயாரிக்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸிடமும் திலக்மாரப்பனவிடமும் தெரிவித்தார்.

இதற்குப் பின் நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்து கொண்டார்.

அக்கூட்டத்திலும் ஜனாதிபதி தொடர்பான மோசடிகள் பேசப்பட்டதால் சந்திரிக்காவிற்கும் அமைச்சர்களுக்குமிடையே வார்த்தைப் பரிமாற்றங்கள் சற்று சூடாகவே நடைபெற்றன.

பெருந்தோட்ட அமைச்சர் லக்ஷ்மன்கிரியெல்ல, மந்திரி சபைக்கு வழங்கியுள்ள ஆவணங்களின் படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்பு நிதி அமைச்சராக இருந்த காலத்தில் றப்பர் உற்பத்திக் கூட்டுத் தாபனத்திற்குத் திறைசேரியிலிருந்து 900, 340,000 ரூபாவை வழங்க உத்தரவிட்டார் என்றும், அதில் ரூ.541,167,730.63 முறையற்ற வழியில் கையாளப்பட்டது அல்லது மோசடி செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து இதற்கு முன்னைய வாரத்தில் நடை பெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்கப்பட்ட போது அன்றைய பெருந்தோட்ட அமைச்சர் இரத்ன சிறீ விக்கிரம நாயக்கா கேட்டுக் கொண்டதற்கமையவே அந்தத் தொகையை தான் வழங்க உத்தரவிட்டதாகத் தெரிவித்திருந்தார். அப்போது அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தான் இவ்விடயம் குறித்து ஆராயப்போவதாகக் கூறியிருந்தார்.

இக்கூட்டத்தில் லக்ஷ்மன் கிரியெல்ல அதை நினைவுபடுத்தி அன்றைய பெருந்தோட்ட அமைச்சர் நிதித் தேவைக்காக ஜனாதிபதியிடம் கோரிக்கை எதையும் விடவில்லை என்றதோடு கூட்டுத்தாபனத்திற்கு நிதி வழங்குமாறு ஜனாதிபதி தனது கையெழுத்து மூலம் திறைசேரிக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் குறிப்பிட்டார். எனவே ஜனாதிபதி கடந்த கூட்டத்தில் கூறியதற்கு இது முரணாக இருக்கிறது. இந்த வெட்கக்கேட்டை அவரால் மூடி மறைக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அப்போது தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கா றப்பர் கூட்டுத்தாபனத்திற்குத் தரமற்ற இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவை ஆர் ஆர். நவிகெரி என்ற கம்பெனியில் மிகவும் கூடிய விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் கூறினார்.

அச்சமயத்தில் அமைச்சர் கருணநாயக்கா ஆடம்பர வாகன இறக்குமதி ஊழலிலும் இக்கம்பெனிக்கு தொடர்பிருக்கிறது என்றார்.

இக்கம்பெனியின் ஈடுபாடு பற்றி அரசாங்கம் ஆராயும் என்றும் தரமில்லாத இயந்திரங்களையுடைய வாகனங்களை வாங்குவதற்கு 100மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாகவும் காணி அமைச்சர் ரஞ்சித செனரத்னா தெரிவித்தார்.

இவைகளுக்கு உடனே பதிலளிக்க முடியாத ஜனாதிபதி இவ்விடயங்கள் குறித்து ஆராய்ந்து மந்திரி சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

அப்போது கருணநாயக்கா இவைகளுக்கு நீங்கள் இப்போது ஏன் பதில் அளிக்கக்கூடாது என்றார்.

அதற்கு ஜனாதிபதி நான் எல்லா விடயங்களையும் பரிசோதித்து விட்டு வருவேன் என்றார். அடுத்து ஜனாதிபதியின் ஆடம்பர வாகனக் கொள்வனவு பற்றிய விடயம் இடம்பெற்றது.

**- கபிலர் -**

**கருணநாயக்கா:**
இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுள் சில ஏற்கெனவே பாவிக்கப்பட்டவை என்று தகவல் கிடைத்துள்ளது. நீங்கள் ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்று கூறுகிறீர்கள். அது தான் உங்கள் நிலைப்பாடா?

**சந்திரிகா:**
ஆம். அவை ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. பிரேமதாஸா குண்டுகள் துளைக்காத, பாவிக்கப்பட்ட இரண்டு பென்ஸ் கார்களை இறக்குமதி செய்துவிட்டு புதுக்கார்களுக்கான விலையைச் செலுத்தியது போல் நான் செய்யவில்லை. நீங்கள் 1988ஆம் ஆண்டிலிருந்து புலனாய்வை மேற்கொள்ள வேண்டும்.

**சேனரத்ன:**
கடந்த ஏழு ஆண்டுகளாக நீங்கள் என்ன செய்தீர்கள்?

இதற்கு ஜனாதிபதி பதில் அளிப்பதற்கிடையில் கருணநாயக்கா அவரைப் பார்த்து நீங்கள் குண்டுத்தாக்குதலால் இரு வாகனங்கள் சேதமாகிவிட்டதாகக் கூறினீர்கள். அது உண்மையல்ல. வாகன முகாமைத்துவ முகவர் அந்த வாகனங்கள் திருத்தப்பட்டு உங்களது கராஜில் நிற்பதாக இன்று தெரிவித்துள்ளார். நீங்கள் ரூ1.5மில்லியன் அவர்களுக்குக் கொடுக்குமதியாக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார் என்றார்.

**சந்திரிகா: (கோபமாக)**
எப்படியும் இருக்கட்டும் இனி நான்பதில் அளிக்கப்போவதில்லை இந்த உரையாடலுக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கிறேன். கடந்த ஏழு ஆண்டுகளாக எத்தகைய மோசடிகளும் நடக்கவில்லை.

(அப்போது பலத்த சிரிப்பொலி அந்த அறையில் நிரம்பியது.)

**கருணநாயக்கா:**
மோசடி உண்டோ இல்லையோ அது பற்றி நீங்கள் கருத்துக்கூறலாம். நாங்கள் தான் அதுபற்றி தீர்மானம் எடுக்க வேண்டும். மந்திரிசபையில் உள்ள 30பேர்களில் ஒருவர் தான் நீங்கள். நீங்கள் எங்களை அதிகாரம் செய்ய முடியாது.

**சந்திரிகா:**
ஆனால் நான்தான் மந்திரி சபையின் தலைவி.

**கருணநாயக்கா:**
அதுசரி ஆனால் உங்கள் பதிலை அடுத்த வாரம் தெரிவியுங்கள்.

---

26. ஜெ.நிசான், மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
27. ம.நிகிந்தன், வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
28. செ.எடிசன், யாழ். மத்திய கல்லூரி.
29. இ.நிசாந், தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை
30. க.வாகீசன், சென்ஜோண் பொஸ்கோ.
31. அ.தர்சாந்தன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
32. கு.சந்திரகுமாரி, வல்வை ம.ம.வித்தியாலயம்.
33. து.பிரியந்தி , கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலம்.
34. பி.டியேனிஸ் கூரே, மானிப்பாய் சென்ஆன்ஸ்.
35. க.நிறோசா, கொக்குவில் சீ.சீ.த.க பாடசாலை.
36. மு.கிருசன், நாவாந்துறை றோ. க. வித்தியாலம்.
37. வி.கிரிஜா, நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலை.
38. க.ரொஷாந்தன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலம்.
39. நா.பிரகாஷ், காசிப்பிள்ளை வித்தியாலயம்.
40. ப.சதாசினி , வல்வை சிவகுரு வித்தியாலயம்.
41. பி.ஜோதிகா, வல்லை சிவகுரு வித்தியாலம்.
42. ச.யதுகுலன், மானிப்பாய் மெ. ஆங்கிலப் பாடசாலை.
43. பி.யோபிதா, வல்வை சிவகுரு வித்தியாலயம்.
44. யோ.திருக்கணேசன், வல்வை அ.மி.த.க பாடசாலை.
45. வே.ஜெயவதனி, வல்வை அ.மி.த.க பாடசாலை.
46. S.உசித்தா, நெ.மெ.மி.த.க பாடசாலை.
47. க.மதுராகரன், மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
48. கு.குமரன், பரியோவான் கல்லூரி.
49. க.கபிலேஸ்வரி, நாவாந்துறை றோ. க வித்தியாலயம்.
50. க.திவ்வியா, கோப்பாய் நாவலர் வித்தியாலம்
51. ர.சஞ்சயன், றோ.க.த.க பாடசாலை.
52. பா.சிறிகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி.
53. தி.நகுல்றாஜ், கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை.
54. கு.கனிஸ்ரன், யாழ். மத்தியகல்லூரி.
55. ச.திபாகர், இந்து ஆரம்ப பாடசாலை.
56. வி.பரசுராமன், தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை.
57. ஸ்ரீ.சரண்யன், சைவத்தமிழ் வித்தியாலயம்.
58. சோ.சிந்துகேயன், மத்திய கல்லூரி.
59. இ.துவாரகா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
60. ச.விஸ்வரூபன், வல்வை ம.மகா வித்தியாலம்.
61. செ.ஜெகப்பிரியா, சென்.ஜோண்பொஸ்கோ.
62. வி.அனுசியன், மத்திய கல்லூரி.
63. விசாகேசசர்மா, நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை.
64. சி.ஜனதரன், கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை.
65. நி.பகீரதன், சங்குவேலி அ.த.க பாடசாலை.
66. இ.கிரிசாந்தன், துன்னாலை மெ.மி.த.க பாடசாலை.
67. செ.சீராளன், யாழ்ப்பாணக் கல்லூரி.
68. ப.சதாசினி, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
69. க.கீர்த்திகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
70. இ.சிந்துஜன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலம்.
71. க.தருஷன், யாழ். மத்திய கல்லூரி.
72. வி.முருகதாஸ், தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை.
73. T.தர்சன், கம்பர்மலை G.T.M.S
74. S.விதுரன், S.J.B
75. ப.லக்சனா, சங்குவேலி அ.த.க பாடசாலை.
76. க.சுதர்சன், மத்திய கல்லூரி.
77. ஜெ.ஜெகரூபன், வல்வை சிவகுருவித்தியாசாலை.
78. வா.நிலக்ஷி, சென்.ஜோண்பொஸ்கோ.
79. இ.துவாரகா, கொக்குவில்ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.
80. ஜீ.தியாகினி, விவேகானந்தா வித்தியாசாலை.
81. பு.சிவதர்சன், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
82. இ.சபேஸ்வரன், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
83. சி.உசேந்தினி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
84. ப.ரமணாகரன், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
85. கு.டினிஸ்ரன், ஏழாலை மகாவித்தியாலயம்.
86. து.துவாரகன், ஏழாலை மகாவித்தியாலம்.
87. சஞ்சிபன், ஏழாலை மகாவித்தியாலயம்.
88. அ.ரம்யா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
89. கா.திவேயன், ஏழாலை மகாவித்தியாலயம்.
90. சு.தசாங்கன், ஏழாலை மகாவித்தியாலயம்.
91. சி.சுகந்தினி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.
92. வா.நிலாணி, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
93. யோ.சுதன்யா, உருப்பிராய் றோ.க.த.க பாடசாலை.
94. கு.தபேஸ், ஏழாலை மகாவித்தியாலயம்.
95. செ.சரணியா, ஏழாலை மகாவித்தியாலயம்.
96. நொ.செல்வின், பத்திரிசியார் கல்லூரி.
97. பா.பிறேமசியா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
98. சு.சூர்யா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
99. கு.சென்போல், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
100. சி.சியாமலா, ஏழாலை மகாவித்தியாலயம்.
101. பே.மோகன்றாஜ், ஏழாலை மகாவித்தியாலயம்.
102. த.ஜனந்தினி, இந்து ஆரம்பப் பாடசாலை.
103. ஜோ.விமல்ராஜ், மத்தியகல்லூரி.
104. ஆ.சயந்தினி, ஏழாலை மகாவித்தியாலயம்.
105. ஞா.தினேஸ் றைமன், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
106. செ.சிவேஸ், அருணாசலம் வித்தியாலயம்.
107. யோ.அசாத், அளவெட்டி றோ.க.த.க வித்தியாலயம்.
108. சிந்துயன், ஏழாலை மகாவித்தியாலயம்.
109. சா.துஷிந்தன், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
110. வி.தீபன்ராஜ், ஆணைப்பந்தி மெ.மி.த.க பாடசாலை.

**கடந்த வாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்.**

01. ஒற்றுமையை
02. மாணவர்கள்
03. பாடசாலை
04. மகிழ்வு
05. கூடி
06. வேற்றுமை
07. பேசமாட்டோம்
08. துள்ளி
09. ஓடி
10. தந்து
11. பந்து
12. யானை
13. முறம்
14. காதுகள்
15. களிறு
16. பாகன்
17. D
18. F
19. G
20. B
21. C
22. E
23. H
24. A
25. பொருத்தமானது
26. செல்கின்றான்
27. செல்வேன்.
28. துகில்
29. அகங்காரம்.
30. இனிமை
31. 67
32. 35
33. தரம் III
34. 77
35. 4
36. 924ரூபா
37. 76ரூபா
38. 41
39. 375 I
40. 15,795/=
41. M
42. W
43. W
44. M
45. M
46. உடம்பு
47. மலை
48. மன்னிப்பு
49. ஒட்டகம்
50. ஒன்றுகூடல்
51. News
52. Saturday
53. Stamp
54. Drawing
55. Break first
56. I X
IV X
V X
59. காற்றுத்திசை காட்டி
60. போத்தல்
61. தக்கை/ஓலைச்சார்பு
62. கம்பி
63. C
64. B
65. சிறிது காலத்தின்பின் இறந்து விடும்
66. C
67. A - எத்தனம்
68. B - சுமை
69. C - சுழலிடம்
70. றப்பர்பான்ட்
71. மரக்கட்டை
72. 1948.02.04
73. தூய்மை
74. சவர்க்காரம், சம்போ
75-80. பொருத்தமான வசனங்கள்.

# உலக இளைஞர் யுவதிகள் தினம்

# 20 லட்சம் பேர் கனடாவில் கூடினர்

உலக இளைஞர், யுவதிகள் தினம் நேற்றைய தினம் கனடா நகரான ரொரோண்டோவில் போப்பாண்டவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தலைமையில் நடைபெற்றது.

இதில் உலகம் முழுவதுமுள்ள 173 நாடுகளைச் சேர்ந்த 20 இலட்சம் இளைஞர் யுவதிகள்பங்கு கொண்டனர்.

உலக இளைஞர், யுவதிகள் தினம் 1984ஆம் ஆண்டுமுதல் முதலாகக் கொண்டாடப்பட்டது.

உலகிலே இளையோரே மாபெரும் சக்தி என்பதைவலியுறுத்தியே மேற்படி தினம் கொண்டாடப்படுகின்றது.

கடந்த 2000ம் ஆண்டு இடம் பெற்ற இந்நிகழ்வில்20 இலட்சம்இளையோரும் 1995 ஆண்டு சுமார் 40 இலட்சம் இளையோரும் கலந்துகொண்டமை சாதனையாகக் கருதப்படுகிறது. (உ-19)

# சதாமை பதவி கவிழ்ப்பது ஈராக்கியர் கடமை

## ஈராக்எதிர்க்கட்சித்தலைவர்

(தெஹிரான்)

ஜனாதிபதி சதாம் ஹுஸைனைபதவிகவிழ்ப்பது ஈராக்கியர்களின்கடமையாகுமென ஈராக் இஸ்லாமிய எதிர்க்கட்சித் தலைவரான ஆயதுல்லாஹ் முஹம்மத் பாகிர் அல்-ஹகிம் தெரிவித்துள்ளார்.

பேரழிவு விளைவிக்கும் ஆயுதங்களை சதாம் பயன்படுத்துவதை சர்வதேச சமூகம் தடுத்தால் ஈராக்கியர்கள் ஆட்சியை பெறுப் பேற்பர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# வழக்கு நடந்த வேளை குட்டித் தூக்கம் போட்ட நீதிபதிக்கு எச்சரிக்கை

இங்கிலாந்து நாட்டு நீதிபதியான கேபிரியல் ஹட்டன், கற்பழிப்பு வழக்கொன்று இடம்பெற்றுக் கொண்டிருந்த போது இருமுறை தூங்கிவிட்டார்.

இது தொடர்பாக இங்கிலாந்து நீதித்துறை தலைவர் இர்பின் பிரபுவிடம் புகார் செய்யப்பட்டதையடுத்து நீதிபதி எச்சரிக்கப்பட்டார்.

இதேவேளை ஒரு பெண் தொடர்பான வழக்கில் நீதிபதி தூங்கிவிட்டதானது பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அவ மரியாதையையே எடுத்துக் காட்டுகிறதென பெண்ணுரிமைவாதிகள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். (உ-3)

# உலக தரிசனம்

# அஸாமில் வெள்ள அனர்த்தம் ஒரு இலட்சம் பேர் நிர்க்கதி நிலையில்

(புதுடில்லி)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமானஅஸாமில்வெள்ள அனர்த்தத்தினால் ஒரு இலட்சம் பொதுமக்கள் தமது வீடுகளைஇழந்து நிர்க்கதிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிலநாட்களாக தொடர்ச்சியாக அங்கு மழைபெய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடுமையானமழையின் காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்துஓடுவதுடன், அணைக்கட்டுக்களும் சிதலமடைந்துள்ளன.

இதுவரை 100 கிராமங்கள் வெள்ளத்தினால் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.

வெள்ளம் முற்றாக வடிவதற்கு இரண்டு மாதம் எடுக்குமெனவும் மீட்புப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-19)

# விமானக் கடத்தலை தடுக்க பயிற்றப்பட்ட 9 பெண்கள் பாகிஸ்தானில் பணி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் விமானக் கடத்தல்களைத் தடுப்பதற்காக முதல் தடவையாக 9 பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பெண்கள் இவ்வளவு காலமும் விமான நிலையத்தில் பெண் பயணிகளை விமானப் பயணத்தின்போது ஏற்றி இறக்கும் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

மேற்படி பெண்கள் 20-25 வயதிற்கு உட்பட்ட திருமணமாகாதவர்கள் இவர்களுக்கு ஆயுதமின்றி கடத்தல் காரர்களை எவ்வாறு மடக்குவது என்பது பற்றி பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக கடுமையான உடற்பயிற்சிகள் கராத்தே, குங்பூ பயிற்சிகள் உட்பட எதிரியை அடித்துக் கொல்வது சம்பந்தமான நுட்பங்களும் பயிற்ற பட்டுள்ளன. (உ-19)

# ஆப்கான் தலைவருக்கு அமெரிக்க படைகள் விசேட பாதுகாப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைவர் ஹமூர் பர்ஹாய்க்கு அமெரிக்கப் படையினர் விசேட பாதுகாப்பை வழங்கவுள்ளனர்.

இதற்கென விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் அங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஆப்கானின் துணை ஜனாதிபதி இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானமை தெரிந்ததே.

ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள பொம்மை அரசைத் தக்க வைத்துக் கொள்ள அமெரிக்கா கடும்பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.

அதில் முதல்கட்டமாக பொம்மை அரசில் அங்கம் வகிக்கும் அனைத்து உயரதிகாரிகளுக்கும் பாதுகாப்பு வழங்கி வருகின்ற உள்ளூர் ஆப்கானியப் படையினர் அவசர அவசரமாக விலக்கிக் கொள்ளப்படுகின்றனர்.

அதே வேளை 240 உள்ளூர் பொலிஸாருக்கு விசேட பயிற்சிகளை அமெரிக்க இராணுவம் வழங்கி வருகின்றது. ஆப்கானிலுள்ள உள்ளூர் பிரமுகருக்கு மேற்படி பொலிஸாரே பாதுகாப்பு வழங்குவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-19)

# யாழ். நூலகத்திற்கு 30 ஆயிரம் நூல்களை தமிழக அன்பர் அன்பளிப்பு

(சென்னை)

உலகத்தமிழர் பேரமைப்பு ஆரம்ப விழாவில் யாழ். நூலகத்திற்கு தமிழக அன்பர் ஒருவர் 30 ஆயிரம் அரியநூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சென்னையில் ஞாயிறன்று நடைபெற்ற உலகத்தமிழர் பேரமைப்பு விழாவில் வைத்தே இந் நூல்களை உலகத்தமிழர் பேரமைப்பைச் சேர்ந்த நிதிக்குழு உறுப்பினர் நா. ப. ராமசாமி வழங்கியுள்ளார்.

இந் நூல்களை சமூக அபிவிருத்தி அமைச்சரும், நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# மத்திய கிழக்கில் ஏவுகணைத் தாக்கு ஹமாஸ் இயக்க இராணுவப் பிரிவு தலைவர் உட்பட 10 பேர் பலி

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கின் காஸா பகுதியில் இஸ்ரேலிய எவ்-16 ரக விமானங்கள் நேற்று அதிகாலை நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களின் போது ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவுத்தலைவர் ஷேக் சலாக் ஷெஹாதா உட்பட 10 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் 90 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 3 சிறுவர்களும் 4 பெண்களும் உள்ளடங்குவர் என பலஸ்தீனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் இஸ்ரேலியர்கள் பலரை ஹமாஸ் தீவிரவாதிகள் கொலை செய்துள்ள நிலையில், பலியான மேற்படி இராணுவப் பிரிவு தலைவரை பல நாள்களாக இஸ்ரேலியர் கொலை செய்யத் திட்டமிட்டு வந்தனர்.

இஸ்ரேலிய விமானப்படையினர் மேற்கொண்ட இந்த தாக்குதலின்போது பலஸ்தீனர்களின் 5 வீடுகளும் தரைமட்டமாகியுள்ளன. (உ-8)

# பிரிட்டன் பிரஜைகள் இந்தியா செல்ல விதித்த கட்டுப்பாடுகள் தளர்வு

(இந்தியா)

உல்லாசப்பயணிகளாக இந்தியா செல்லும் தனது பிரஜைகளுக்கான கட்டுப்பாடுகளை பிரிட்டன்முற்றாகத் தளர்த்தியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையிலான போர்ப்பீதி தணிந்து வருவதையடுத்தே கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ அறிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு பயணம் செய்வதை இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளுமாறு பிரிட்டிஷ் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான், இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்கர்களுக்கான கட்டுப்பாடுகளை அமெரிக்கா முற்றாக நீக்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

# ஜோர்தான் அகழ்வாய்வாளர்களால் 4 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட செப்பு தொழிற்சாலை கண்டுபிடிப்பு

(அம்மான்)

ஜோர்தானில் நான்கு ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட செப்புத் தொழிற்சாலையின் பகுதிகள் அகழ்வாய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கண்டு பிடிப்பு சரித்திர ஆய்வாளர்களுக்கு பெரிதும் துணைபுரியும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

ஜோர்தானின் பாலைவன பகுதியில் இத் தொழிற்சாலையின் மூலம், செம்பு உலோக உற்பத்திக்காகபழங்குடியினர் பாலைவன வெப்பத்தை எவ்வாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதை கண்டுபிடித்துள்ளனர்.

இத்தொழிற்சாலைநிலநடுக்கம் காரணமாக நிலத்தில் புதையுண்டிருக்கலாம் எனநம்பப்படுகிறது.

பல நூற்றுக்கணக்கான செம்புஉற்பத்தி தொடர்பான பண்டங்கள் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இப்பிரதேசத்தை சுற்றுலாப் பயணிகளுக்கான சுவர்க்கபுரியாக மாற்றியமைக்கஜோர்தானின் அகழ்வாய்வுத்துறை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது. (உ-8)

# பாகிஸ்தான் பிரஜைகள் உண்ணாவிரதம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் 51 பாகிஸ்தானியப் பிரஜைகள் கடந்த வியாழக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையின் கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்கு பயணமாகுவதற்கு முயற்சிசெய்த போதே மேற்படி 51 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை,இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் கைதிகளுடன் நடத்திய பேச்சுக்கள் பலனளிக்கவில்லை.

இருந்தபோதும், இக்கைதிகளின் விவகாரம் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தானில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயம் முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (உ)

எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்

குறள்

# வலம்புரி

## சிறையில் கைதிகளின் அவலம்

களுத்துறைச் சிறையில் இருக்கின்ற கைதிகள் நேற்று 5வது நாளாக சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்த நிறுத்தம் என்பன நடைமுறையில் இருக்கும் போது வருடக் கணக்கில் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுகின்ற வேதனைக்கு இன்னமும் முடிவில்லை.

விடுதலைப்புலிகளோடு தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் கைதை பயங்கரவாதத் தடைச் சட்டமும், அவசர காலச் சட்டமும் நியாயப்படுத்தியது.

தமிழர்களை பழிவாங்குவதற்கென்றே பேரினவாத அரசினால் கொண்டுவரப்பட்டதே பயங்கரவாதச் சட்டம். அச் சட்டம் வேலிச் சண்டைக்குப் போன தமிழ் இளைஞனும் புலி என்ற பொய் முறைப்பாட்டில் சிறைக்குள் சித்திரவதைக்காளாக வழி சமைத்தது.

அத்தகைய கொடூரமான பழிவாங்கல்களின் அடிப்படையில் சிறைக்குள் தள்ளப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் நான்கு சுவருக்குள் தமது வாழ்வை இழந்து உளப் பாதிப்புக்குள்ளானவர்களாக உள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த பின்னர் நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் போது தென்னிலங்கை சிங்கள மக்கள் தாராளமாக சுதந்திரமாக யாழ்ப்பாணத்திற்கு வந்து செல்லும் போது தமிழ்க் கைதிகள் மட்டும் சிறைகளுக்குள் அடைபட்டுக் கிடப்பதற்கான காரணம் என்னவாக இருக்க முடியும்!

சிறைக்கைதிகளின் விடுதலைக்கு சட்டங்களும், நீதி பரிபாலனமும் தடையாக இருக்குமாயின் உலகில் சமாதானம் ஏற்படுவதற்குத் தடையாக உள்ள சட்ட வாக்கத்தைக் கொண்டுள்ள நாடு இலங்கையாகவே இருக்க முடியும்.

எனவே நாட்டில் உண்மையான சமாதானம் ஏற்படவேண்டுமாயின்-அரசு உண்மையான சமாதானத்தை விரும்புமாயின் சிறைகளில் வாடுகின்ற அப்பாவித் தமிழ்க் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

---

# இலங்கை முழுவதையும் முதன்முறை கைப்பற்றி

# ஈழம் ஆண்ட சோழ மன்னன் இராஜேந்திரன்

- 1017 இல் இலங்கை முழுவதையும் கைப்பற்றிய இராஜேந்திரன் இலங்கை மன்னனையும், அவனுடைய செல்வங்களையும் தென்னிந்தியாவிற்கு எடுத்துச் சென்றான்.
- இலங்கை முழுவதும் முதன் முறையாகக் கைப்பற்றப்பட்ட இச்சம்பவம் இதற்கு முன்னர் ஒருபோதும் நடைபெறவில்லை. பின்னரும் பிரித்தானிய ராட்சிவரை நடைபெறவில்லை.

அனுராத புரத்தைத் தாக்கி ஆதிக்கத்தை ஏற்படுத்தினான் இராஜ ராஜசோழன். ஆயினும் இலங்கை முழுவதையும் கைப்பற்றுவதில் கவனம் செலுத்தவில்லை. இதனால் ரோஹண மாகிய தென்னிலங்கை இராச்சியத்திலே சிங்கள மன்னன் ஐந்தாம் மஹிந்தன் தொடர்ந்தும் ஆட்சிநடத்தி வந்தான், சிங்கள மன்னனின் ஆட்சியைத் தொடர்ந்தும் நீடிக்க விடுவது அபாயத்தின் அறிகுறியாய்த் தெரிந்தது. ஈழத்தைப் பூரணமாக அடிமைப்படுத்துவது சோழருடைய ஆதிக்கப் படர்ச்சிக்கு அவசியமாய் இருந்தது. ஆகவே இராஜராஜ சோழனின் பின்பு பதவிபெற்ற அவன் மகன் இராஜேந்திர சோழதேவன் இலங்கைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்தினான். தந்தையின் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு மேலும் விரிவான தொரு விளக்கத்தைக் கொடுத்தான். ஈழம் ஆண்ட சோழனாகத் திகழ்ந்தான்.

### ஐயங் கொண்டசோழமூவேந்த வேளான்

கி. பி. 1012இல் இராஜேந்திர சோழன் அரசபதவி யேற்றான். அப்போது அவனது கவனத்தை ஈர்த்த முதலாவது பிரச்சினையாக இலங்கைப்பிரச்சினையே இருந்தது. இலங்கை முழுவதையும் கைப்பற்றிப் பேரரசின் தென் எல்லையைப் பாதுகாத்துக் கொண்ட பின்னர் பிறதிசைகளிலே படையெடுப்புகளை நடத்துவதற்கு இராஜேந்திரன் திட்டமிட்டான்போலும் இலங்கை முழுவதையும் கைப்பற்றும் ஏகாதிபத்திய நோக்கம் கொண்ட இராஜேந்திரன் அந்நோக்கத்தை நிறைவேற்றப் பெரும்படையொன்றை அனுப்பினான், அப்படைக்குத் தலைமைதாங்கத் தளபதிகளுள் ஒருவனான ஐயங் கொண்ட சோழமூவேந்த வேளான் தேர்ந்தெடுக்கப்பட்டான் என ஊர்காவற்றுறை கடற் கோட்டையிற் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டொன்றால் அறிகின்றோம். இவன் சோழப் படையிலே ஒரு அதிகாரத் தண்டனாயகனாக விளங்கினான்,

**★ இரா. பேரம்பலம் ★**

### முழு இலங்கையும் கைப்பற்றப்பட்டது

ஐயங் கொண்ட சோழ மூவேந்தர் வேளானின் தலைமையில் வந்தசோழப் படை இலங்கையை அடைந்தது. வெற்றிகரமாக ரோஹணம் வரை சென்று முழு இலங்கையையும் கைப்பற்றியது, மன்னன் மஹிந்தனும் சிறைப் பிடிக்கப்பட்டான். அத்துடன் இலங்கை மன்னனிடம் சிக்கியிருந்த பாண்டியனுடைய முடியையும், ஆரத்தையும் கைப்பற்றுவதற்குப் பராந்தக சோழன் காலம் தொடக்கம் எடுக்கப்பட்டு வந்த முயற்சிகளும் வெற்றிகரமாக முற்றுப் பெற்றன. 1017ல் நடந்த இப் படையெடுப்பைப் பற்றி சிங்கள மக்களின் வரலாற்று நூலான சூள வம்சமும், ஊர்காவற்றுறைச் சாசனம் முதலிய இலங்கை ஆதாரங்களும் பல செய்திகளைத் தருகின்றன. அவற்றை உறுதிப் படுத்துவதற்கு உதவும் வகையில் ஏனைய சோழச் சாசனங்களும் கிடைத்துள்ளன. இவற்றையெல்லாம் ஒன்றோடொன்றை ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் உண்மை வரலாற்றைப் பெற்றுக் கொள்ளமுடிகின்றது.

வலிமை வாய்ந்த சோழ மன்னனால் அனுப்பப்பட்ட படை இலங்கைவந்து இறங்கியதும், இங்கிருந்த மக்களுக்குப் பெரும் இன்னல் விளைத்ததுடன், ரோஹணத்துக்கும் முன்னேறிச் சென்றது. முன்னேறிய படை அரசியையும், பெருந்தொகையான ஆபரணங்களையும், விலை மதிக்க முடியாத வைரக் காப்பினையும்உடைக்க முடியாத வாளினையும் கைப்பற்றியது. அச்சத்தால் காட்டினுள் ஓடி ஒளித்துக் கொண்ட அரசனையும் கைப்பற்றியதுடன், அவனையும் செல்வங்களனைத்தையும் உடனடியாகச் சோழ மன்னனிடம் அனுப்பி வைத்தது. சூளவம்சம் தரும் இத்தகைய செய்திகளை உறுதிப் படுத்தும் வகையில் சோழருடைய சாசனங்கள் சில முக்கிய செய்திகளைத் தருகின்றன. ஈழ மன்னனுடைய முடியும் முன்னர் பாண்டிய மன்னன் இலங்கையில் அடைக்கலமாக வைத்த முடியும் ஆரமும், சோழப் படைகளால்கைப்பற்றப்பட்டதோடு இலங்கை முழுவதும் கைப்பற்றப்பட்டது எனவும் சோழ சாசனங்களால் அறிய முடிகின்றது. இச்செய்திகளைச் சூள வம்சத்தின் செய்திகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது ஈழமன்னனின் முடியையும், வேறு செல்வங்களையும் சோழப்படைகள் கைப்பற்றி இருந்தன எனக் கொள்ளலாம.

### சோழராட்சியில் இலங்கை

சூளவம்சம், சோழசாசனங்கள், ஊர்காவற்றுறைச் சாசனம் போன்ற ஆதாரங்கள் தரும் செய்திகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து இப்படையெடுப்பின் விளைவுகள் பலவற்றைக் கண்டு கொள்ளமுடிகிறது. அவற்றுள்

1) இலங்கைமுழுவதும்முதன் முறையாகக் கைப்பற்றப்பட்டமை.

2) ஈழத்து மன்னனும், அவனுடைய அரசியும் கைதிகளாகத் தென்னிந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டமை.

3) ஈழத்து மன்னனுடைய செல்வங்கள் சோழராலே அபகரிக்கப்பட்டமை என்பன முக்கியமானவையாகும்.

இச் சம்பவங்களினால்இலங்கையிலே வலுப்பெற்றசோழ ராதிக்கம் அடுத்த ஐம்பத்து மூன்று ஆண்டுகளாக உச்ச நிலையில் இருந்தது. ஈழம் ஆண்டசோழனான இராஜேந்திரனின் இத்தகைய சாதனைகள் இலங்கை வரலாற்றில் மிக முக்கியத்துவம் உடையவை எனலாம்.

---

## பிரதமர் செயலகத்தின்

# ஒருங்கிணைப்பு அலுவலகங்களை வட-கிழக்கில் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களிலுள்ள 8 மாவட்டங்களில் பிரதமர் செயலக ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்தில் இடம் பெறும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவே இவ்வலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளதாக பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அம்பாறை, திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலேயே ஒருங்கிணைப்பு அலுவலகம் நிறுவப்படவுள்ளது.

இதன் முதல் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமர் செயலகத்தின் அலுவலர்கள் இருவர் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் மட்டு மாவட்ட அரச அதிபர் சி. சண்முகம், மட்டு- திருமலை மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

(உ-8)

---

## தினசரி தியானம்

### மனச்சாட்சி

நீக்கப் பிரியா நினைக்க மறக்கக்கூடாப்
போக்குவரவற்ற பொருளணைவ தெந்நாளோ?

-தாயுமானவர்

உள்ளிருக்கும் ஒண்பொருளே, உன்னை நான் உலகெலாம் தேடியலைகிறேன், என்னே!

ஒவ்வோர் உயிர்க்கும் உயிராய் மனத்தினுள் தெய்வம் மனச்சாட்சியாய் எழுந்தருளியுள்ளது, ஆனால் அதை இன்னதென்று சுட்டிக்காட்ட இயலாது. பின்பு அதைப்புறக்கணிக்கவும் இயலாது. தன் போக்கில் தன்காரியத்தை அது நிறைவேற்றுகிறது. நமது ஆணவம் தலையெடுத்திருக்கும் போது மனச்சாட்சி மறைந்திருக்கிறது. ஆணவத்தை ஒதுக்கி வைத்து விட்டு அமைதியுற்றிருக்கும் போது மனச்சாட்சி பேசுகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

---

## பிரதமர் ரணில்

# அமெரிக்க அதிபர் புஷ் இன்று சந்தித்து பேச்சு

(கொழும்பு)

கடந்த சனியன்று அமெரிக்காவுக்கு அரசுமுறைப்பயணம் மேற்கொண்டபிரதமர்ரணில் விக்கிரமசிங்கஇன்றுஅமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் பாதுகாப்பு ராஜாங்கச் செயலாளர் கொலின் பவல்ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் உலக வங்கியின் தலைவர் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் உட்பட பலரையும் பிரதமர்சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை, இருநாடுகளுக்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நாளைகைச்சாத்திடப்படவுள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 18 வருடங்களுக்குப் பின் இலங்கைத் தலைவர் ஒருவர் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

**களுத்துறை...**

வித்துள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 206 தமிழ் அரசியல் கைதிகளில் 29 பேர் தம்மை விடுவிக்க அல்லது வழக்குத் தாக்கல் செய்யக்கோரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

இதேவேளை கறுப்பு யூலை தினமான நேற்றுக்காலை 6மணி முதல் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் உள்ள 28 தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போரை ஆரம்பித்துள்ளனர். (ம)

**இலங்கையின்...**

தீர்வை ஏற்படுத்த முயலும் நோர்வேயின் முயற்சிக்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவை வழங்கும்.

இலங்கைப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே அரசு நீண்ட காலமாக பாடுபடுகின்றமை பாராட்டத்தக்க முயற்சி என்று கூறிய றொக்கா,

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டால் அவர்கள் மீதான தடை குறித்து மீள்பரிசீலனை செய்ய முடியும் எனவும் அதுவரை அவரகள் மீதான தடை தொடர்ந்து நீடிக்கப்படுமென்றும் தெரிவித்தார். (இ)

## அமைச்சர் ஆறுமுகத்தை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானை கைது செய்து நுவரெலியா நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நுவரெலியா நீதிமன்ற நீதிபதி பிரபாக்ஸ் சில்வா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிவடைந்த உள்ளூராட்சித் தேர்தலில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாகவே அமைச்சரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு நீதிவான் பணித்துள்ளார். (த)

**செல்லக்கிளி...**

பெட்டிச் சந்தியில் இலங்கை இராணுவம் மீது நடத்திய துணிகரத் தாக்குதலில் செல்லக்கிளி அம்மான் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

**இளவாலைப் பகுதியில்...**

சடலம் மீட்கப்பட்டது.

எலும்புக் கூடான நிலையில் மீட்கப்பட்ட இச் சடலம் ஒன்றரை மாதத்துக்கு முன்னர் இறந்தவரது சடலமாக இருக்கலாமென்று தெரிவிக்கப் படுகிறது.

சடலத்தில் றோஸ் கலர் சேட்டும, ஆஸ் கலர் ரவுசரும் காணப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அதனை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.(இ-6)

## எக்ஸ்போ விமான சேவை இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று காலை இடம்பெறவுள்ள எக்ஸ்போ விமான சேவையில் 25 பேருக்கான ஆசனங்கள் வெற்றிடமாக உள்ளன. இந்த விமான சேவையில் பயணம் செய்ய விரும்புபவர்கள் பயண ஆயத்தங்களுடன் காலை 7மணிக்க சிங்கள மகாவித்தியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த)

**பிறந்தநாள் வாழ்த்து**

நல்லூர், செல்லர் வீதியைச் சேர்ந்த லயன்சீமாட்டி பரமசிவம் சரஸ்வதியம்மா அவர்கள் தனது 70வது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார். அவரை கணவன், லண்டனில் உள்ள பிள்ளைகள் உட்பட சகோதரர், சகோதரிமார், உற்றார், உறவினர் நண்பர்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

107, செல்லர் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்
(C/4752)

## ஈராண்டு நிறைவில்



இங்கிதமாய்ப் பேசி எமை ஈன்றெடுத்து ஆளாக்கி
இவ்வுலகில் ஏற்றமுடன் வாழவைத்த தெய்வமே!
உங்களுடன் பழகிய நாள்கள் உள்ளத்திலே
நிதர்சனமாய் உறைந்து நிதமெம்மை
உணர்த்தி நிற்கின்றனவே!
பங்கயத்திலமர்ந்த பார்வதி பரமேஸ்வரன் கழலினையில்
சந்ததமும் நீரிருந்து சங்கரன் தாள் பணிந்திடவே
எங்கள் பிரார்த்தனைகள் இரண்டாண்டுகள் நிறைவில்
இதயத்தில் உறைந்து நிதம் இரை மீட்கின்றனவே!
- குடும்பத்தினர் -

தோற்றம் 26.06.1941 மறைவு 14.08.2000

**அமரர்**

**தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்**

(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி)

**இடமாற்றம்**

அனைத்து கொம்பியூட்டர் ஒவ் (f) செற் பிறிண்டிங் வேலைகளுக்கும்

**கங்கை**
ஓவ் (f) செற பிறிண்டேஸ்
184A, நாவலர் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**R.B.BOOKING CENTER**

**ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகம்**

யாழ், கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி பஸ் சேவைகள்

(அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்)

# மாபெரும் சுற்றுலா

(C/4753

மாணவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.) 14.08.2002 புதன் காலை 6மணிக்கு யாழ். நகரில் எமது ஸ்தாபனத்திலிருந்து குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் பயணக் கட்டணம் ரூபா **3000/=** மட்டுமே. சொற்ப ஆசனங்கள் மட்டும் உள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

**பிரதானமாக பார்வையிடும் இடங்கள்:**

வெந்நீர்க்கிணறு, கோணேஸ்வரர் ஆலயம் (திருகோணமலை), மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம், சிகிரியா, தலதாமாளிகை (கண்டி), தேசியப் பூங்கா (பேராதனை), ஆஞ்சநேயர் ஆலயம் (ரம்பொடை), சீதா கோயில் (நுவரேலியா), தேசியப் பூங்கா (கக்கல), இராவணன் நீர்வீழ்ச்சி, கதிர்காமம், முன்னேஸ்வரம், பொன்னம்பலவாணேஸ்வரம், தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, ருவன்வெலிசாய, ஆயிரம்கால் மண்டபம், அரசமரம் (அநுராதபுரம்) ஆகிய இடங்கள் பிரதானமாக பார்வையிடப்படும்.

**தென்மராட்சியில் எமது கிளை ஆசனப்பதிவகமான எஸ்.எஸ். பஸ் ஆசனப்பதிவகம் ஊடாக பின்வரும் இடங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.**

**கணேசா ஹாட்வெயர்**
(பழைய பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி

**ஸ்ரீ கண்ணகி பல்பொருள் வாணிபம்**
(மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் அருகில்)
புத்தூர்ச்சந்தி

**சாயிராம் பார்மசி**
கண்டிவீதி, சாவகச்சேரி
சங்கத்தானை.

**கோகிலா தேநீர்சசாலை**
(பஸ் நிலையம் முன்பாக)
கொடிகாமம்

**துர்க்கை அம்பாள் புத்தகசாலை**
(ஐயா கடையடி, கண்டிவீதி,
ஆசீர்வாதம் புத்தகசாலை)
மீசாலை.

**ஸ்ரீ மெடிக்ஸ்**
கண்டிவீதி, மீசாலை
T.P: 070 - 212753

**ஜெயம் கடை**
பழமுதிர்ச்சோலை, கண்டிவீதி,
மீசாலை

**விக்கினேஸ்வரா களஞ்சியம்**
கண்டிவீதி, புத்தூர்ச்சந்தி,
மீசாலை.

**யாழ் நகரில்**

மேலதிக தொடர்புகளுக்கு:
எஸ்.செல்வேள் or பாலா மாஸ்ரர்
**கண்ணகி பல்பொருள் வாணிபம்**
கண்டி வீதி, புத்தூர்ச்சந்தி, மீசாலை.
T.P : 070 - 212792

**யோகாஸ் புடைவையகம்**
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்

**ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பு நிலையம்**
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

**றோமி தொலைத்தொடர்பு நிலையம்**
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P: 2880

**ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகம்**
நவீனசந்தை, வைரவர் கோவில் அருகில், யாழ்ப்பாணம்.
**15, Grand Bazaar, Jaffna.**

**ஸ்ரீ ஸ்ரோர்ஸ்**
சுதுமலைச் சந்தி,
மானிப்பாய் வீதி, மானிப்பாய்

**சபா தேநீர்ச்சாலை**
துரை வீதி முன்பாக,
கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.